# புதுவிதி
PUTHU VITHI

விலை 20/=

பக்கங்கள் 24

29 டிசெம்பர் 2018

புதுமை : 03 விதி : 134


'யாதும் ஊரே! யாவரும் கேளிர்!!'



# தவிக்கும் வன்னி



மீண்டும்
ஒரு பனிப்போர்



மீள்குடியேற்றம்
வீட்டுத் திட்டமே
பிரதான பிரச்சினை



விண்வெளி வீரர்களின்
ஒருநாள் எப்படி?



பருவநிலை மாற்றம்
பணக்கார நாடுகள்
பாராமுகம்







"நான் நடிக்க வந்த புதிதில் பட வாய்ப்புக்காக பாலியல் உறவுக்கு அழைத்தார்கள். இதனால் 8 மாதம் பட வாய்ப்பு இல்லாமல் வீட்டில் சும்மா இருந்தேன்.

எனக்கு இருக்கும் நடிப்புத் திறமையை மட்டுமே நம்பினேன். இதனால் இன்று பிரபலமாக முடிந்தது." - இப்படி மீ ரூவில் கூறியிருக்கிறார் அதிதி ராவ்.

விஜய் சேதுபதியின் 'றெக்க' படத்தை இயக்கிய ரத்னகுமார் ஜீவாவை இயக்கவுள்ளார். இந்தப் படத்தில் தெலுங்கில் இந்த வருடம் அறிமுகமான ரியா சுமன் தமிழில் அறிமுகமாகிறார்.

'தென்னிந்திய மொழிகளில் அறிமுகமாகும் எல்லா நடிகைகளுக்கும் தமிழ்ப் படம் கனவாக இருக்கும். அது எனக்கு விரைவில் கிடைத்துள்ளது. விரைவில் தமிழ் கற்றுக்கொள்வேன்" என ரியா கூறியுள்ளார்.

'உங்களின் உடல் பாகங்கள் எனக்கு மிகவும் பிடிக்கும்' என ஒருவர் டாப்ஸியை டேக் செய்து ருவிற்றரில் பதிவிட்டுள்ளார்.

அதற்கு, 'வாவ்! எனக்கும் மிகவும் பிடிக்கும். எனக்கு என் மூளை பிடிக்கும், உங்களுக்கு?' என்ற கேள்வியுடன் பதில் கொடுத்துள்ளார், டாப்ஸி.

பிரபாஸ், ஷ்ரத்தா கபூர் நடிப்பில் 2017 ஓகஸ்டில் தொடங்கப்பட்ட 'சாஹோ' படத்தின் படப்பிடிப்பு, இறுதிக் கட்டத்தை நெருங்கியுள்ளது.

மிகப்பெரும் பொருள் செலவில் உருவாகிவரும் இப்படத்தை, 2019 ஓகஸ்ட் 15 அன்று வெளியிடத் திட்டமிட்டுள்ளனர்.







புதுவிதி
PUTHU VITHI

இனியொரு விதி செய்வோம் - அதை
எந்த நாளும் காப்போம்
தனி ஒருவனுக்கு உணவில்லையெனில்
ஜகத்தினை அழித்திடுவோம்.

புதுமை : 03 | 29 டிசெம்பர் 2018 | விதி : 134

# பட்டினியால் வாடும் பல கோடி இந்திய மக்கள் போருக்குப் பாலம் போட பல கோடி ரூபாய்கள்

இந்தியாவில் அசாம் மாநிலத்தையும் அருணாசலப் பிரதேசத்தையும் இணைக்கும் வகையில் 4.93 கி.மீ. அதாவது கிட்டத்தட்ட 5 கி.மீ. நீளமான பாலமொன்று கடந்த டிசெம்பர் 24 ஆம் நாளன்று இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியால் திறந்து வைக்கப்பட்டுள்ளது. இது ஆசியாவிலேயே மிகவும் நீளமான பாலமாகக் கருதப்படுகின்றது. இதுகால வரை சீனாவில் யாங்சி நதிக்கு மேலால் கட்டப்பட்ட அணையே ஆசியாவில் மிக நீளமான பாலமாகக் கருதப்பட்டது.

பல இலட்சம் கோடி ரூபாய்கள் செலவில் அமைக்கப்பட்ட இப்பாலம் மேலே 3 வழித்தடம் கொண்ட வாகனப் பாதையையும் அதன் கீழே இரு வழித்தடம் கொண்ட புகைவண்டிப் பாதையையும் கொண்டதாகும்.

அருணாசலப் பிரதேசம் சீனாவின் எல்லைப் பகுதியில் அமைந்துள்ள ஒரு மாநிலமாகும். இங்கு கூர்க்கா இனத்தவர்களும் இந்தியாவின் பல்வேறு இனங்களைச் சேர்ந்த பழங்குடி மக்களும் வாழ்ந்து வருகின்றனர். 1962 ஆம் ஆண்டு இடம்பெற்ற சீன - இந்தியப் போரின்போது அருணாசலப் பிரதேசத்தின் ஒரு பகுதி சீனாவால் கைப்பற்றப்பட்டது. சீனா அப்பகுதியை உரிமை கொண்டாடி வருகின்றது.

சீனாவுடன் போர் ஏற்படும் பட்சத்தில் வேகமாகப் படையினரை நகர்த்தும் பொருட்டே இப்பாலம் அமைக்கப்பட்டதாக இந்தியத் தரப்பால் அறிவிக்கப்படுகின்றது

அருணாசலப் பிரதேச மலைக் காடுகளில் வளரும் ஒருவகைப் பெரிய மரங்கள் பட்டைகளிலிருந்தே புற்றுநோய்க்கான மருந்து உருவாக்கப்படுகின்றது. அதன் உரிமை அமெரிக்க நிறுவனம் ஒன்றுக்கு வழங்கப்பட்டுள்ளது. ஒரு கிராம் மருந்து செய்ய பல மரங்கள் அழிக்கப்பட வேண்டுமாம். அதனால்



அக்காடுகளுக்குப் பேரழிவு ஏற்பட்டு இயற்கை சூழலில் பெரும் மாற்றங்கள் ஏற்படும் எனக் கூறப்படுகின்றது.

அந்த அமெரிக்க நிறுவனத்தின் தேவைக்காகவே அப்பாலம் போடப்பட்டதாகவும் மக்களை ஏமாற்றவே சீனப் பூதம் காட்டப்படுவதாகவும் கூறப்படுகின்றது. எனினும் மரங்களை வெட்டுவதற்கெதிரான பழங்குடி மக்களின் போராட்டங்கள் அரச அடக்குமுறைகள் மத்தியிலும் தொடர்கின்றன. மக்களைப் பட்டினி போட்டு அறவிடப்படும் வரிப் பணத்தில் அமெரிக்க நிறுவனத்தின் தேவை நிறைவேற்றப்படுகின்றது.

> ஆலமரத்தில் பேய் காட்டுவானாம்
> காலடியில் குழி பறிப்பானாம்

# ரணிலின் வெற்றிக் கொண்டாட்டம் யாழில் வெடி கொளுத்தி ஆரவாரம்

நீதிமன்றத் தீர்ப்பையடுத்து மீண்டும் பிரதமராக ரணில் விக்கிரமசிங்க பிரதமராகப் பதவியேற்றதைக் கொண்டாடும் முகமாக யாழில் 45 நிமிடங்கள் பட்டாசு கொளுத்தி கொண்டாடப்பட்டதாக மௌபிம என்ற சிங்களப் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

இச்செய்தி பற்றிக் கருத்து வெளியிட்ட யாழ்ப்பாண ஊடகவியலாளர்கள் எவருமே அப்படி வெடி கொளுத்தல் நடந்ததாகத் தாங்கள் அறியவில்லை எனவும் ரணிலின் வெற்றி தமிழர்களின் வெற்றி என்பது போன்ற இனவாத மாயையை ஏற்படுத்த இட்டுக் கட்டப்பட்ட கதை எனத் தெரிவித்துள்ளார்.



தமிழ் மக்களைக் கொன்று குவித்தாலும் தமிழ் மக்களின் உரிமைப் போராட்டத்தைத் தோற்கடித்ததிலும் மைத்திரியோ, மஹிந்தவோ போல ரணிலுக்கும் கணிசமான பங்கு உண்டு என்பதில் தமிழ் மக்கள் தெளிவாகவே உள்ளனர்.

> நாய்க்குக் கடலில் போனாலும்
> நக்குத் தண்ணிதான்

# த.தே.கூட்டமைப்பைப் பழிவாங்க மூன்று உறுப்பினர்களுக்கு வேட்டு

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் 3 நாடாளுமன்ற உறுப்பினர்கள் இரட்டைப் பிரஜாவுரிமை கொண்டவர்கள் எனத் தாங்கள் ஆதாரபூர்வமாகக் கண்டறிந்துள்ளனர் என்றும் அவர்களின் நாடாளுமன்ற உறுப்பினர் பதவிகளைப் பறிக்க வெகுவிரைவில் நீதிமன்ற நடவடிக்கை எடுக்கவுள்ளனர் என்றும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் ரோஹித அபயகுணவர்த்தன தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி ரணிலைப் பிரதமர் பதவியிலிருந்து இறக்கிப் பிரதமராக நியமித்தபோது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ரணிலுக்கு ஆதரவாகவே செயற்பட்டது. அதன் காரணமாக மஹிந்தவின் பிரதமர் கனவு தோல்வியில் முடிந்தது. அதனால் கோபம் கொண்ட மஹிந்த அணியினர் கூட்டமைப்பைப் பழிவாங்கும் வகையிலேயே மேற்படி நடவடிக்கையில் இறங்கியுள்ளனர் எனச் சில அரசியல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.


எனினும் ஊடகவியலாளர்களிடம் இத்தகவலை வெளியிட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ரோஹித அபயகுணவர்த்தன இரட்டைப் பிரஜாவுரிமை கொண்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரின் பெயரை இப்போது வெளியிடப் போவதில்லை எனவும் தாங்கள் சட்ட நடவடிக்கை எடுக்கும்போது தெரிந்து கொள்ளும்படியும் கூறியுள்ளார்.


ஏற்கனவே இரட்டைப் பிரஜாவுரிமையைக் காட்டி நடிகை கீதா குமாரசிங்கவின் நாடாளுமன்ற உறுப்பினர் பதவி பறிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.


> இரும்படிக்க இடுப்பு எழும்பாதவன்
> முருக்கம் செத்தலை முறிப்பனெண்டானாம்

# கடந்தவார சமூக வலைத்தளங்களில்



















**ஏமாற்றியவர்களுக்கு
நன்றி சொல்.!
அவர்கள்
ஏமாற்றத்தை
சொல்லி தரவில்லை...
இனி ஏமாறாமல்
இருக்க
அனுபவத்தை
கற்று தந்து
இருக்கிறார்கள்...!**

புதுவிதி
PUTHU VITHI

தொடர்புக்கு:
ஆசிரிய பீடம் : 021 493 7777
விநியோகம் : 021 493 2222
விளம்பரம் : 021 493 1111

107, இராசவீதி,
கோப்பாய் - திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.
puthuvithi@gmail.com

## நமக்காக நாமே

இறுதிப் போர் தின்ற உயிர்கள்போக, எஞ்சியவர்கள் ஏதிலிகளாக முள்கம்பி வேலிக்குள் அடைக்கப்பட்டார்கள். நெடுநாட்களின் பின், சொந்த இடங்களில் மீளக் குடியேற்றப்பட்டனர். மீளக் குடியமர்ந்தவர்களுக்கு கிடைத்ததெல்லாம் சொற்ப உதவிகளே. எப்போதும் போல தமது கடும் உழைப்பையே நம்பியவர்கள் வன்னிப் பிராந்திய மக்கள். சாம்பலில் இருந்து உயிர்க்கும் பீனிக்ஸ் பறவைகள் போன்று தமது வாழ்வைக் கட்டியெழுப்பினார்கள். அதன் விளைவே இன்று பரந்து விரிந்த கிளிநொச்சி, முல்லைத்தீவு நகரங்கள்.

போர் தந்த வலிகளில் இருந்து மீண்டு - அதன் இழப்புகளில் இருந்து எழுந்தவர்களை அடிக்கடி இயற்கை வதைத்தது. வெள்ளம், வறட்சி என மாறி மாறி ஏற்பட்ட அனர்த்தங்களால் அம்மக்கள் அடிக்கடி பொருளாதாரப் பாதிப்புக்களை எதிர்கொண்டார்கள். ஆனால் எப்போதும் தங்களின் உழைப்பையே நம்பியவர்கள் சில நாட்களிலேயே அந்தப் பாதிப்புக்களில் இருந்து மீண்டார்கள். போர் இவர்களின் ஒட்டுமொத்த சொத்துக்களையும் விழுங்கியபோதும் தமது கடும் உழைப்பால் அவற்றை மீள உருவாக்கினார்கள். இப்போது வெள்ளம் அவற்றை அள்ளிச் சென்றுள்ளது.

வெள்ளத்தால் எல்லாவற்றையும் இழந்து நிற்பவர்களுக்கு அரசாங்கமோ, அரசியல்வாதிகளோ அவ்வளவு பெரிதாக எதையும் செய்துவிடவில்லை. ஆனால் 'நமக்காக நாம்' என்று வடக்கின் மக்களே வெள்ளப் பாதிப்புக்கு உள்ளான பிரதேசத்தவர்களுக்கு உதவிகளைச் செய்தார்கள். நம் மக்களுக்கு நம்மைத் தவிர வேறு யாரும் உதவப்போவதில்லை என்பதை நன்குணர்ந்தவர்களாக பொருட்கள் சேகரிக்கப்பட்டு அவர்களுக்கு வழங்கப்பட்டன. சுமார் 90 ஆயிரம் மக்கள் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட போதிலும் சமூகவலைத்தளங்களின் உதவியால் விரைந்து அவர்களுக்கு உதவிகள் கிடைத்தன.

வடக்கு மக்களின் - குறிப்பாக இளைஞர்களின் இந்தச் செயற்பாடுகள் பாராட்டத்தக்கவை. இப்போது வன்னி மக்களுக்குத் தேவை ஒன்றே ஒன்றுதான். பாதிப்பு முடியும்வரை அவர்களை கைதூக்கிவிட ஒரு கை. எப்போதும் கடும் உழைப்பை நம்பிய - நம்பும் மக்கள் அவர்கள் மீண்டும் எழுந்து - தம் வாழ்வைத் தாமே கட்டியெழுப்புவார்கள். கை கொடுக்கும் பணியை ஒவ்வொரு மக்களும் - இளைஞனும் செய்ய வேண்டும் என்பதே எமது எதிர்பார்ப்பு.

'யாதும் ஊரே! யாவரும் கேளிர்!!

# ஈழத்தின் இறுதிப் போர் சாட்சியாய்...! 33

- வன்னிமகள்
எஸ்.கே.சஞ்சிகா

பெயரைச் சொல்லி அழைக்கக் கூடாது. அது ஆபத்தை நானே அவர்களுக்குத்தேடிக் கொடுத்ததாகப்போய்விடும். கூழாங்கற்களை எடுத்து எத்தி எறிகிறேன். அது அந்தப் போராளிப் பெண்ணிடம் சென்றடையவில்லை. மீண்டும் மீண்டுமாக எத்தி எறிகிறேன். சத்தத்தை உணர்ந்து அவளது தலை திரும்புகிறது. அது கஜானி சித்தி இல்லை. ஆனால் அந்த முகமும் பரீட்சயமான முகமே. வறண்டுபோன புன்னகையோடு மிரட்சிகலந்த பார்வையோடு "நிற்காதே போ" என சைகை காட்டுகிறாள். ஏமாற்றத்தோடு திரும்பினேன்.

தலையில் ஒரு துவாயை போட்டுக்கொண்டு சில போராளிகள். அதில் கொலின் சித்தியும் நிற்கிறார். புதுக்குடியிருப்பு மாணவரமைப்பில் நான் நின்று உயர்தரம் படித்தபோது அந்த நிர்வாகத்தில் கணக்காளராக இருந்தவர். கிட்ட நெருங்கி சித்தி என்றேன். அழுதோம். அவர்கள் சரணடைய முடிவெடுத்திருந்தனர்.

'வேண்டாம் சித்தி, அவங்கள் (இராணுவம்) சுட்டுப்போடுவாங்கள். சித்திரவதை செய்வான்கள். போகாதேங்கோ" கட்டிப்பிடித்து அழுதேன்.

'சஞ்சி குழந்தைப்பிள்ளை போல கதைக்காதயடா. சனங்களோட சி.ஐ.டியும் திரியிறாங்கள். தமிழினி சரணடைஞ்சிட்டதா அறிவிக்கிறார்கள். நாங்களும் சரணடைவம். நடக்கிறது நடக்கட்டும்." என அவர்கள் சரணடையும் எண்ணத்தை சொல்லியபடி அந்த இடத்தை விட்டு நடக்கத் தொடங்கினர். நான் அந்தப் பனைகளோடு முதுகைச்சாத்தி அமர்ந்து விதியை நினைத்து விம்மினேன்.

நினைவுகளுக்குள் கஜானி சித்தியின் முகம். அப்பாவியாக மென்மை கலந்த ஒரு முகத்தோற்றத்திற்குச் சொந்தக்காரி. பேச்சில் மென்மையும் அப்பாவிக் குரலும் இருக்கும். கண்டிப்புக்கூட வித்தியாசமான நகைச்சுவைப் பண்புடன் சிந்திக்க வைக்கத்தக்கதாக இருக்கும். புகைப்படப் பிரிவு பொறுப்பாளராக இருந்தவரை தலைவர் மாமா சமாதான காலத்தில் வெளிநாடு செல்ல பணித்ததை மறுத்து தமிழீழம் மலரும் ஆனந்தத்தை தன் கமராவால் படம் பிடிக்க வேண்டும் என சொல்லி வெளிநாட்டு பயணத்தை மறுத்திருந்தார். அதனால் நிதர்சனப் பொறுப்பாளராக தலைவரால் நியமிக்கப்பட்டவர்.

புகைப்படங்களை விதம் விதமாக ரசனையோடும் பொறுப்புணர்வோடும் எடுப்பதில் தனிரகம். அவளுடைய புகைப்படங்கள் தலைவருக்குமு விருப்பத்துக்குரியவை. அவரது பாராட்டுகளையும் தட்டிக்கொடுப்புகளையும் நிரம்பவே பெற்ற புகைப்படப் பிரிவு நிதர்சனத்தின் போராளி. போராட்ட களமுனைகளில் நேரடியாகச் சென்று களமுனைகளின் பதிவுகளை வீடியோவாகவும் புகைப்படங்களாகவும் கொண்டுவந்து ஆவணமாக்கும் பெரும்பணிக்குச் சொந்தக்காரி.

போராட்டகளத்தில் வேறு பிரிவு போராளிகளாக இருந்தாலும் அந்தத் துறை சார்ந்த வேலைக்கு மட்டுமே உரியவர்களாக இருந்ததில்லை. அதுபோலவே நிதர்சன போராளிகளுக்கும் படப்பிடிப்பு மட்டுமே அவர்களது வேலையாக இருப்பதில்லை. காயப்பட்ட போராளிகளை இனம் கண்டு மருத்துவப் போராளிகளுக்கு அறிவிப்பது , களமுனையில் ஓடும் இராணுவத்தினரை தமது கமெரா கண்ணினூடாக துல்லியமாக கண்டு இனங்காட்டுவதும் கட்டளையிடுவதும் என பல பணியாற்றும் வல்லமை கொண்டவர்களாக நிதர்சனப் போராளிகளும் இருந்தனர்.

செஞ்சோலையின் பெரும்பாலான நிகழ்வுகளை வீடியோ செய்ததில் கஜானி சித்தியின் பங்கும் அளப்பரியது. தலைவரின் மடியில் ஏறி விளையாடும் குழந்தைகளை அழகாகப் படம் பிடித்தவர் அவரே. செஞ்சோலைப் பிள்ளைகளும் தமது நிகழ்வுகளை புகைப்படம், வீடியோ எடுத்திருந்தாலும் வெளிநாட்டுத் தொடர்பாடலுக்குரிய படங்களை கஜானி சித்தியே எடுத்திருந்தார்.

இறுதி யுத்தத்தில் முள்ளிவாய்க்கால் பாடசாலையில் காயமடைந்த நிலையில் தனது வீடியோ கமெராவை ஏந்தி படப்பிடிப்பிலும் புகைப்படம் பிடிப்பதிலும் ஈடுபட்டிருந்தபோது கண்டேன். கதைப்பதற்கு அது சந்தர்ப்ப சூழலாக அமையவில்லை. மக்களும் போராளிகளும் களத்துக்குள் ஒன்றாக இருந்த காலமே முள்ளிவாய்க்கால். போராட்ட களமும் பொது மக்கள் இருப்பும் ஒன்றோடு ஒன்றாக கலந்த இடமாக அது இருந்தது. வேலையைக் குழப்பக்கூடாது என்பதற்காக ஒரு இயலாமைப் புன்னகையோடு நகர்ந்தேன். அவர் காலில் காயமடைந்திருக்க வேண்டும்.

நடப்பதற்கு சிரமப்பட்டு இருந்தவாறும் மெல்ல இரண்டடி நடந்தும் தன் பணியை செய்ததை அவதானித்தேன். ஆனாலும் அவர் முகத்தில் பணியைச் செய்ய வேண்டும் என்ற கடமையுணர்வு நிரம்பி இருந்தது. எனது சிறிய கமெராவால் சில படங்களை எடுத்துக்கொண்டு அந்த இடத்தை விட்டு வெளியேறினேன். அப்போது கிபிர் விமானங்கள் இரைந்து உயிரைப் பறிக்கும் உறுமலுடன் ஆனந்தபுரப் பக்கம் குண்டுகளைக் குத்தின. எல்லோரும் விழுந்து உயிர் காக்கப் போராடிக் கொண்டிருக்க நிதர்சனப் போராளிகள் அந்த சம்பவத்தை லொறிக்கு மேல் ஏறி நின்று படமாக்கிக் கொண்டிருந்தனர்.

கஜானி சித்தியும் காயத்தைப் பொருட்படுத்தாது லொறிக்கு மேல் நின்று கருகி எரியும் ஆனந்தபுரத்தோ தென்னையும் பனையும் நிறைந்த அந்தக் காட்சியைப் படமாக்கிக் கொண்டிருந்தனர். (சாட்சியம் நீளும்)

# மீண்டும் ஒரு பனிப்போர்

■ யோகநாராயணன்



ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, கடந்த ஒக்ரோபர் மாதம் 26 ஆம் நாள் ரணில் விக்கிரமசிங்கவைப் பிரதமர் பதவியிலிருந்து நீக்கி விட்டு மஹிந்த ராஜபக்ஷவை நியமித்ததை அடுத்து ஏற்பட்ட மோதல்கள், முரண்பாடுகள், அரசியல் குழப்பங்கள் டிசம்பர் 14 ஆம் நாள் நீதிமன்றத்தால் வழங்கப்பட்ட தீர்ப்பையடுத்து முடிவுக்கு வந்தது. மீண்டும் ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன முன்னிலையில் பதவிப் பிரமாணம் செய்து கொண்டார். அடுத்த நாடாளு மன்றம் கூடியபோது சபாநாயகர் கரு ஜெயசூரிய ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பினரே எதிர்க்கட்சியில் அதிக உறுப்பினர்களைக் கொண்டிருந்தவர்கள் என்ற வகையில் நாடாளுமன்ற உறுப்பினர் மஹிந்த ராஜபக்ஷவே எதிர்க்கட்சித் தலைவர் என அறிவித்தார்.

அந்த அறிவித்தலையடுத்து மீண்டும் நாடாளுமன்றத்தில் ஒரு குழப்பநிலை தோன்றியது. மிளகாய்த்தூள் வீச்சு, நாடாளுமன்ற தளபாடங்கள் உடைப்பு, காயப்படுத்தல் போன்ற வன்முறைச் சம்பவங்கள் இடம்பெறாவிட்டாலும் கடும் வாதப் பிரதிவாதங்கள் எழுந்தன.

நாடாளுமன்ற உறுப்பினர் மஹிந்த ராஜபக்ஷ பொதுஜன பெரமுனவில் உறுப்புரிமை பெற்றதன் மூலம் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் உறுப்புரிமையை இயல்பாகவே இழந்து விட்டதாகவும் அப்படி உறுப்புரிமை இழந்த ஒருவர் நீதிமன்றில் முறைப்பாடு செய்து இடைக்காலத் தடையுத்தரவு பெறாவிட்டால் அவர் நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை இழந்து விடுவாரெனவும் அப்படியான நிலையில் நாடாளுமன்ற உறுப்பினரல்லாத மஹிந்த ராஜபக்ஷவுக்கு எப்படி எதிர்கட்சித் தலைவர் பதவி வழங்க முடியுமென ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீமால் கேள்வி எழுப்பப்பட்டது.

அதேவேளையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவரான ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மூன்று அமைச்சுப் பதவிகளை வகிக்கும் அமைச்சரவையின் ஓர் உறுப்பினர் என்ற வகையில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை எதிர்க்கட்சியாக ஏற்றுக் கொள்ள முடியாது எனவும் அதனால் மஹிந்த ராஜபக்ஷவை எதிர்க்கட்சித் தலைவராக நியமிக்க முடியாது எனவும் தனது சட்டவல்லமையை வெளிப்படுத்தி வாதிட்டார்.

அவ்வாறே ஐக்கிய தேசிய முன்னணியைச் சேர்ந்த பலரும் மஹிந்த ராஜபக்ஷ எதிர்க்கட்சித் தலைவராக நியமிக்கப்பட்டமை சட்டவிரோதமானதென வாதிட்டனர். ஆனால் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பினர் மஹிந்த ராஜபக்ஷ தற்சமயமும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் உறுப்பினரே என வாதிட்டனர். இப்படியான நிலையில் சபாநாயகர் கருஜெயசூரிய இப்பிரச்சினை தொடர்பாகப் பரிசீலனை செய்து பின்பு முடிவை அறிவிக்கிறேன் எனத் தெரிவித்தார்.

இந்நிலையில் பொதுஜன முன்னணியின் பிரதம அமைப்பாளரும் மஹிந்தவின் சகோதரருமான பஷில் ராஜபக்ஷ மஹிந்த ராஜபக்ஷ பொதுஜன முன்னணியின் ஓர் உறுப்பினரல்ல எனத் தெரிவித்து விட்டார். அதேவேளையில் மஹிந்த ராஜபக்ஷ தான் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஆயுட்கால உறுப்பினர் எனவும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஆலோசகராக இப்போதும் பதவி வகிக்கிறார் என்றும் தெரிவித்துள்ளார். அவர் ஊடகவியலாளர்கள் மத்தியில் பொதுஜன முன்னணியில் சேர்வதற்கு விண்ணப்பம் கையளித்ததாகவும், ஆனால் தான் இன்னமும் அதில் சேரவில்லை என்றும் தெரிவித்தார். ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் செயலாளரும் மஹிந்த இன்னமும் தமது கட்சியின் உறுப்பினரே எனவும் கூறியுள்ளார்.

இன்னொருபுறம் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் சபாநாயகர் தான் தவறு செய்துவிட்டார் என ஒப்புக் கொண்டு மன்னிப்புக் கோரினார் எனவும் தான், 'மன்னிப்புக் கேட்பது தவறுக்குப் பரிகாரமாகாது, தவறு திருத்தப்பட வேண்டும்" எனத் திட்டவட்டமாகத் தெரிவித்து விட்டேன் எனவும் பகிரங்கமாகத் தெரிவித்துள்ளார்.

ஒருபுறம் இவ்வாறு சர்ச்சைகள் தொடரும் நிலையில் எவ்வாறு பிரதமர் பதவி நீக்கப்பட்டபோது அதை ஏற்க மறுத்து ரணில் விக்கிரமசிங்க அலரி மாளிகையிலிருந்து வெளியேற மறுத்தாரோ அவ்வாறே இரா. சம்பந்தனும் எதிர்க்கட்சித் தலைவரின் செயலகத்தில் இருந்தும் உத்தியோகபூர்வ வாசஸ்தலத்தில் இருந்தும் வெளியேற மறுத்துவிட்டார்.

ஆட்சி மாற்றத்துக்கான ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவினதும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பினரதும் முயற்சிகள் தோல்வியடைந்த நிலையில் அது எதிர்க்கட்சி தலைமையைப் பெறுவதற்கான போட்டியாக வடிவெடுத்துள்ளது. ஐக்கிய தேசிய முன்னணியினரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரும் எதிர்கட்சித் தலைமையை மஹிந்தவுக்கு விட்டுக் கொடுப்பதில்லை என்ற உறுதியான நிலைப்பாட்டை எடுத்துள்ள வகையில் இரு தரப்பினருக்கும் இடையேயான பனிப்போர் தொடர்கின்றது.

அதேவேளையில் மஹிந்த பிரதமர் பதவியை ராஜிநாமா செய்வதற்கு ஈடாக எதிர்க்கட்சித் தலைவர் பதவி வழங்கப்படும் என சபாநாயகர் ஏற்கனவே பேரம் பேசினார் எனவும் சில உறுதிப்படுத்தப்படாத தகவல்கள் கசிந்துள்ளன. எப்படியிருந்த போதிலும் சபாநாயகரின் முடிவுக்காகக் கொழும்பு அரசியல் எதிர்பார்த்துள்ளது.

எதிர்க்கட்சித் தலைவர் பதவி என்பது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனுடன் சம்பந்தப்பட்டது என்ற வகையில் இது தொடர்பாகத் தமிழ் மக்கள் கொண்டுள்ள நிலைப்பாட்டைக் கவனத்தில் எடுக்காமல் விட்டுவிட முடியாது.

வடக்கில் இடம்பெற்ற வெள்ளப்பாதிப்புக் காரணமாக 70 ஆயிரம் மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். இன்னமும் 11 நிவாரண முகாம்களில் தங்கியுள்ளனர். ஒரு வீடு முற்றாக சேதமடைந்துள்ளது. 114 வீடுகள் பாவனைக்கு உதவாத நிலையில் சேதமடைந்துள்ளன. ஏராளமான வயல் நிலங்களும் மேட்டு நிலப் பயிர்களும் அழிவுற்று விட்டன. சமையல் பாத்திரங்கள், உடுபுடவைகள் உட்படப் பல பொருட்கள் வெள்ளத்தில் அள்ளுப்பட்டுப் போய்விட்டன. தமிழ் மக்களுக்கு ஏற்பட்ட இப்பெரும் பாதிப்புத் தொடர்பாக எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தனோ நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரனோ எவ்வித அக்கறையும் காட்டியதாகத் தெரியவில்லை.

எதிர்க்கட்சித் தலைவர் பதவியைக் காப்பதில் காட்டும் அக்கறையின் ஒரு பகுதியைக்கூட ரணிலின் பிரதமர் பதவியைத் தக்கவைக்க எடுத்த பகீரத முயற்சியின் ஒரு சிறுபங்கைக்கூட பாதிக்கப்பட்ட மக்கள் பிரச்சினை தொடர்பாகச் செலுத்தவில்லை. அம்மக்களிடம் சென்று அவர்களைச் சந்தித்து ஆறுதல் தெரிவிக்குமளவுக்குக்கூட அக்கறையற்றவர்களாகவே உள்ளனர். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சாதாரண நாடாளுமன்ற உறுப்பினர்கள் இப்படியான மக்கள் பிரச்சினைகளில் காட்டும் அக்கறையைக்கூட இத்தலைமை உறுப்பினர்கள் காட்டுவதில்லை.

அதாவது எதிர்க்கட்சித் தலைமைப் பதவியால் இதுவரை இனப்பிரச்சினைத் தீர்வுக்கோ அல்லது தமிழ் மக்கள் எதிர்நோக்கும் சமகாலப் பிரச்சினைகளுக்கோ எவ்விதமான சாதகமான பலன்களும் எட்டப்படவில்லை. எனவே எதிர்கட்சித் தலைமை தொடர்பான பனிப்போரில் த்மிழ் மக்கள் அக்கறை காட்டமலிருப்பதில் ஆச்சரியப்பட எதுவுமில்லை. இப்பனிப்போரில் சம்பந்தன், சுமந்திரன், தரப்பினர் வெற்றி பெற்றாலும் சரி, தோல்வியடைந்தாலும் சரி தமிழ் மக்களுக்கு எவ்வித பயனும் கிட்டப்போவதில்லை என்பதே கடந்த மூன்றரை வருடங்கள் கற்றுத்தரும் அனுபவமாகும். ●

# தவிக்கும் வன்னி

■ நோக்கன்



சென்ற வருடம் தெற்கை உலுக்கிய மழை வெள்ளம், இவ்வருடம் வடக்கை உலுப்பிக் கொண்டிருக்கிறது. ஓயாது தொடரும் மழையும் அதனால் ஏற்படும் தண்ணீர் அபாயங்களும் முடிவடையவில்லை.


"எத்தனை நாட்களுக்கு இன்னும் தொடருமோ?" என்று கண்ணீர் வடிக்கிறார் வன்னிக் கிராமவாசி ஒருவர். வடக்கில் நீர் அபாயத்திற்கு உட்படாத பகுதியில் வாழ்கின்றவர்கள் வெள்ள அபாயத்திற்குட்பட்ட இடங்களிலுள்ளவர்களைக் காப்பாற்றவும், அவர்களுக்குத் தேவையான அத்தியாவசியப் பொருட்களைக் கொடுத்துதவவும், அவர்களைஅனர்த்தத்தில் நின்று மீட்டெடுக்கவும் தேவையான நடவடிக்கைகளை உடன் எடுத்திருக்கின்றனர் - விரைந்து செயற்பட்டு இருக்கின்றனர்.

வழமையாக இது போன்ற அனர்த்தங்கள் தெற்கில் நடந்தால் கிளர்ந்தெழுந்து நான் முந்தி நீ முந்தி என்று செயற்படும் பொது நிறுவனங்களும், மக்களிடம் தமது பொருட்களை விற்றுப் பணம் பண்ணும் பெருநிறுவனங்களும் (ஊழசிழசயவ) வடக்கில் நடைபெறும் இது போன்ற விடயங்களுக்குப் பங்களிப்புச் செய்வதில் அக்கறையும் , ஆர்வமும் கொள்வதில்லை என்பதை இம்முறையும் நிரூபித்துக் கொண்டன. அரசியல் கட்சிகளும் தெற்கு அரசியல்வாதிகளைப்போல நடந்து கொள்ளவும் இல்லை. வழமைபோல நிவாரணத்தைச் செய்வதற்காக ஒரு பொதுக் கூட்டத்தை நடத்திக் கலந்துரையாடப்பட்டிருக்கிறது.

தேசிய ஊடகங்களும் ஏனோ தானோ என்று செய்திகளை வெளியிட்டிருக்கின்றவேயொழிய இது போன்ற தருணங்களில் மக்களை ஈடுபடுத்தக்கூடிய பொறுப்புக் கூறலோடு எதுவித செய்திகளையும் அது சார்ந்த கட்டுரைகளையும் வெளியிட்டு வடக்கில் ஏற்பட்டுள்ள இந்த அனர்த்தமும் தேசியப் பிரச்சினைகளில் ஒன்று என்றும் அதிலிருந்து பாதிக்கப்பட்டவர்களை மீட்டெடுப்பதும் தேசியக் கடமைகளில் ஒன்று என்றும் உணர்த்தத் தவறிவிட்டன என்றே எண்ணத்தோன்றுகிறது.

மொத்தத்தில் தற்போது நடைபெற்றிருக்கின்ற செயற்பாடுகள் எமக்குப் பலவிதமான உண்மைகளை வெளிப்படுத்தி யிருக்கிறது. 'நாமே நமக்காக. நமக்காக நாமே" என்றதொரு தாரக மந்திரத்தை உணர்த்தியிருக்கிறது இந்த அனர்த்தம். எம்மை நிர்வகிக்க எமது கடமைகளை நிறைவேற்ற கட்சிகளினதும், நிறுவனங்களினதும் தயவுகள் அவசியமற்றவை என்ற தோற்றப்பாட்டையும் ஏற்படுத்தி இருக்கிறது. சமூகப்பொறுப்பு என்னவென்று விழிப்படைந்தாலேபோதும்

(18ஆம் பக்கம் பார்க்க)



கடந்த இரண்டு வாரங்களாக வன்னி நிலப்பரப்பை ஆக்கிரமித்துள்ள வெள்ள நீர் பற்றியே தற்போது அதிகம் பேசப்படுகிறது. யுத்தத்திற்கு பின்னராகவே இவ்வகையான வெள்ள அனர்த்தம் அதிகம் ஏற்படுவதாக கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த விவசாயி ஒருவர் கூறுகிறார்.

வன்னி நிலப்பரப்பைப் பொறுத்தவரை குளங்களும், ஏரிகளும், கால்வாய்களும் அதிகம் உண்டு. மழை காலங்களில் அவைகள் நிரம்பி மிகுதியான நீரேரிகளையும், கடலையும் சென்றடையக் கூடியதான நில அமைப்பு முன்பு காணப்பட்டதாக ஒரு ஓய்வுபெற்ற நீர்ப்பாசனத் திணைக்கள அதிகாரி குறிப்பிட்டார். மழை வெள்ளம் முறையாக வெளியேற்றப்படக் கூடிய நிலச் சமநிலையில் மாற்றம் ஏற்பட்டதாலேயே இந்த அனர்த்தம் நிகழ்ந்திருக்கிறது. அது மட்டுமல்லாமல் நீர் ஏந்துவதற்காக ஒதுக்கப்பட்ட நிலப்பரப்புகளும் சுருங்கிப் போய் அவைகளிலும் மனிதக் குடிப்பரம்பல் அதிகரித்திருப்பதாகவும் சந்தேகப்பட வேண்டி இருக்கிறது.

அக்காலத்தே இப்போது காணப்படுவதைப்போன்று பல நவீன உபகரணங்கள் இல்லாவிட்டாலும் அவர்கள் இது போன்ற விடயங்களைக் கையாளுவதற்காகக் கொண்ட கணக்கியல் முறையே வேறு. நிலச் சமநிலை தொடக்கம் வான சாஸ்திரங்கள் வரைக்கும் மிகவும் துல்லியமாகக் கணக்கிடப்பட்டு பல நுணுக்கங்களையும் கணக்கில் கொண்டு அமைக்கப்பட்ட பல விடயங்கள் இன்னும் ஆச்சரியப்படத்தக்கவையாகவும், ஆய்வுக்குட்பட்டதாகவும் காணப்படுகிறது. யுத்த காலத்தில் புலிகளும், இலங்கை இராணுவமும் வன்னி நிலப்பரப்பை மாறி மாறிக் கையகப்படுத்திக் கொண்டபோது மண்மேடுகளால் அவர்கள் தமக்கேற்றவாறு தற்காப்பு அரண்களை அமைத்துக் கொண்டதும் நிலச் சமநிலையைக் குழப்பிக் கொண்ட விடயங்களில் முக்கியமானது.


இது தவிர மோதலில் ஈடுபட்ட இரு தரப்பினரும் தண்ணீரை தமது ஆயுதமாக பயன்படுத்தியமை, விமானக் குண்டுவீச்சுக்கள், எறிகணைத் தாக்குதல்கள், அகழிகள் என்பன அமைக்கப்பட்டமை ஆற்றின் அறுத்தோடிகள் அழிக்கப்பட்டமை போன்ற காரணங்களால் பெரு மழையால் ஏற்பட்ட வெள்ளம் கடலுக்கு செல்லும் வழியறியாதமையும் இந்நிலைக்குக் காரணம். போர் காலத்தின்போதான தாக்கங்களின் பின்னரும் பல குளக்கட்டுகள் முறையாக சீர்திருத்தப்படவில்லை. இதுவும் கட்டுகள் உடைபட்டு குளத்து நீர் வெளியேறுவதற்குக் காரணமாக அமைந்தது.

யுத்தம் மௌனிக்கப்பட்ட பின்னர் இது போன்ற புனரமைப்புக்காகச் சென்ற பொறியலாளர்களிடம் உள்ளூர்வாசிகள் சிலர் தமது அனுபவத்தினால் பெற்ற விடயங்களை ஆலோசனையாகச் சொன்னபோது படித்த பொறியிலாளர்கள் அவற்றை உதாசீனப்படுத்தி விட்டதாகவும் வாய் வழிச் செய்தி ஒன்றுண்டு. அவர்கள் சொல்வதையும் காது கொடுத்துக் கேட்டிருந்தால் இது போன்ற விடயங்கள் நடைபெறாது தவிர்த்திருக்கலாம் என்றும் சொல்லப்படுகிறது.

போர் ஏற்படுத்திய அழிவுகளால் தப்பியவர்கள் உழைத்து சிறுசிறுகச் சேர்த்தவற்றை இப்போது இயற்கை அள்ளிச் சென்றுள்ளது... அரசாங்கமோ, அரசியல்வாதிகளோ, தெற்கின் பெருநிறுவனங்களோ நமக்கு கைகொடுக்கப் போவதில்லை. நமக்காக நாமே கைகொடுக்க வேண்டும்...

# விண்வெளி வீரர்களின் ஒருநாள் எப்படி?





மனிதன் இதுவரை செய்த பயணங்களிலேயே சாகசம் நிறைந்தது எதுவெனக் கேட்டால், நிச்சயம் விண்வெளிப் பயணம்தான். சிறுவயதில் பாடசாலை வகுப்பறையில் நீங்கள் என்னவாக ஆக ஆசைப்படுகிறீர்கள் எனக் கேட்டால் நிச்சயம் ஒருவராவது நான் விண்வெளி வீரனாக ஆசைப்படுகிறேன் எனக் கூறுவர். இவ்வளவு ஏன் நமக்கே வானத்தில் விண்வெளி வீரர் உடுத்தும் உடையைக் கண்டும் அவர்கள் புவியீர்ப்பு விசையற்ற நிலையில் அங்கும் இங்கும் தாவி நடந்து வருவதைப் பார்த்தும் ஒருமுறையாவது இம்மாதிரி பயணம் நமக்கு நிகழாதா என நினைத்திருப்போம்.

ஆனால், நாம் நினைத்துப் பார்த்திராத வகையில் விண் வெளிப் பயணம் மிகுந்த ஆபத்து நிறைந்தது. ஆங்கிலத்தில் ஒன்ஸ் இன் தி புளூ மூன் (once in the blue moon) என்பார்கள். அதாவது, எப்பொழுதாவது சாத்தியப்படக் கூடிய விடயங்களை இப்படிக் குறிப்பிடுவர். விண்வெளிப் பயணமும் விண்வெளி வீரராகும் வாய்ப்பும் அப்படித்தான். அனை; வருக்கும் எளிதில் சாத்தியப் படக்கூடிய விடயம் இல்லை. அதற்கென்று பல்வேறு கட்டப் பயிற்சிகளும் பிரத்தியேக நிபந்தனைகளும் உண்டு அவற்றை யெல்லாம் பூர்த்தி செய்தால்தான் விண்வெளி செல்லும் வாய்ப்பு நமக்குக் கிடைக்கும்.

1961ஆம் ஆண்டு ரஷ்யா யூரி ககாரின் (Yuri Gagarin) என்பவரை விண்ணுக்கு அனுப்பியது. முதன்முதலில் விண்வெளியில் பயணம் சென்ற நபர் என்ற பெருமை பெற்றவரும் அவரே. அன்றுமுதல், விண்வெளி ஆராய்ச்சி உலக வல்லரசுகளின் அந்தஸ்தைத் தீர்மானிக்கும் ஒரு விடயமாக உள்ளது. இந்த விண்வெளி வீரர்கள் எப்படித் தயாராகிறார்கள் தெரியுமா? விண்வெளி வீரர் ஆவது சிறிது கடினம் என்றாலும், அதற்கேற்ப முயன்றால் நிச்சயம் ஆகிவிடலாம். விண்வெளி வீரருக்கு உரிய தகுதிகள் சிலவற்றைப் பார்க்கலாம்.

ரஷ்யாவின் RSA-itr; (Russian Space Agency) சேர்ந்தவர் வீரர்களை 'COSMONAUTS' என்றும், அமெரிக்காவின் NASA, CSA மற்றும் JAXA-வைச் சேர்ந்த விண்வெளி வீரர்களை `ASTRONAUTS' என்றும் கூறுவர். விண்வெளி வீரர் ஆக விரும்பும் நபர் தனது மேற் படிப்பை அறிவியல் அல்லது மருத்துவ அறிவியல் சார்ந்து படித்திருக்க வேண்டும். உதாரணமாக இளம் அறிவியல் (Bachelor of science), வானூர்தி பொறியியல் (Aero space engineering) அல்லது வானியல் சம்பந்தபட்ட ஏதேனும் ஒரு படிப்பை நல்ல வீதத்தோடு முடித்திருக்க வேண்டும்.

நல்ல உடல்நிலையுடன் கூடிய மனநிலை அவசியம். ஏனெனில் விண்வெளி வீரர் தெரிவின்போது நமது மனநிலையையும் மிகவும் உன்னிப்பாகச் சோதிப்பர். பார்வைத்திறன் 20/20

இருக்க வேண்டும் இரத்த அழுத்தம், செவி, உடலமைப்பு ஆகியவை சரியான அளவில் இருக்க வேண்டும். ஏதேனும் விண்வெளி முகவர்களால் தெரிவுசெய்தாலும்கூட, தெரிவான உடனே விண்வெளிப் பயணம் அனுப்பிவிட மாட்டார்கள். பயிற்சி மட்டுமே இரண்டு வருடங்கள் வழங்கப்படும்.

சரி... இவ்வளவு ஆபத்து நிறைந்த பயணத்துக்கு ஏன் மனிதர்கள் போட்டியிட்டு தங்கள் உயிரைப் பணயம் வைத்துச் செல்ல வேண்டும் என்ற கேள்வி எழலாம். ஒருமுறை விண்வெளி சென்றால் கூட வரலாற்றின் பக்கங்களில் அவர்களின் பெயர் நிரந்தரமாக இடம்பெற்றுவிடும் அளவிற்கு விண்வெளிப் பயணம் மனிதனின் அதிமுக்கிய சாதனைகளில் ஒன்றாகக் கருதப்படுகிறது. விண்வெளிப் பயணத்திற்கு தேர்வாவதே இந்தளவு கடினம் எனில் விண்வெளி சென்றவுடன் அங்கு அவர்கள் வாழும் முறை அதைவிடக்கடினம். நமது பூமியில் புவியீர்ப்பு விசை மற்றும் எலும்புகள் உதவியால் உடலை நேர்கோட்டு சமநிலையில் வைத்து நடக்கின்றோம். ஆனால், புவியீர்ப்பு விசையற்ற விண்வெளியில் நமது உடலானது பூமியில் ஒத்துழைப்பது போல் ஒத்துழைக்காது. இரத்த அழுத்தத்தையும் சீராக வைத்துக் கொள்வது அவசியமாகிறது. எனவே விண்வெளியில் தங்கியிருப்போர் உடற்பயிற்சியை தங்களின் தினசரி கடமைகளில் ஒன்றாகக் கருதி செய்வர்.

விண்வெளியில் அவர்களுக்கு என்று தனியாகப் பல்துலக்கும் பிரஷ், பற்பசை, முடி சீர்ப்படுத்தும் கருவி ஆகியவை இருந்தாலும் அவற்றை உபயோகிக்கும் முறை முற்றிலும் மாறுபடும். வாஷ்பேசின் இல்லாத காரணத்தால் பல்துலக்கிவிட்டுத் துப்புவதற்குப் பதிலாக வாஷ்கி ளோத் என்றழைக்கப்படும் பிரத் யேக துணியில் துடைத்துவிடுவர். அவர்கள் உபயோகப்படுத்தும் சோப்பிற்குத் தண்ணீர் அவசியம் இல்லை. எனவே, தண்ணீரின்றி உடலைத் தூய்மைப்படுத்தி வாஷ்கிளோத் மூலம் சோப்பு நுரையைத் துடைத்துவிடுவர்.

விண்கலத்தில் மொத்தம் நான்கு குப்பைத் தொட்டிகளை வைத்திருப்பர். குப்பையின் தன்மைக்கு ஏற்ப அதை அந்தந்த தொட்டியில் போட்டு விடுவர். குப்பைத்தொட்டி முழுதாக நிரம்பிய பின்னர் தானாகவே விண்கலத்திலிருந்து வெளியேறிவிடும். 300 வகையான உணவுகள் விண்வெளி வீரர்களுக்கு அங்கீகரிக்கப்பட்ட உணவுகளாக உள்ளன. உணவுகளில் சுடுதண்ணீர் அல்லது குளிர்ந்தநீரை ஊற்றினால் தயாராகும் வகையில் அவை வடிவமைக்கப்பட்டிருக்கும்.

தண்ணீர் மற்றும் ஜூஸ் போன்ற திரவ உணவுகளை நன்கு பொதியிடப்பட்ட செய்யப்பட்ட பையில் ஸ்ட்ரோ மூலம் உறிஞ்சிக் குடிப்பர். விண்கலத்தில் உள்ள கழிவறை நமது பூமியில் பயன்படுத்துவதுபோல் இருந்தாலும் அதனுள் இருக்கும் Vacuum கழிவுகளை உறிஞ்சிக் கொள்ளும் வகையில் அமைக்கப்பட்டிருக்கும். ஜீரோ கிரேவிட்டி (Zero Gravity) என்றழைக்கப்படும்.

விண்வெளியில் நாம் சாதாரணமாக உறங்கமுடியாது. எனவே படுக்கை, சுவருடன் இணைக்கப்பட்டிருக்கும். அந்தப் படுக்கையினுள் சென்று பெல்டை கட்டிக்கொண்டு உறங்க வேண்டும். அனைத்து விண்வெளி வீரர்களுக்கும் அடிப்படை மருத்துவப் பயிற்சி அளிக்கப்பட்டிருக்கும். விண்வெளியில் தங்கியிருப்பவர்களுக்கு தங்களுக்குப் பிடித்த பாட்டு சீ.டிக்கள், ஆபத்தை ஏற்படுத்தாத வகையில் உள்ள விளையாட்டு உபகரணங்களை வைத்துக்கொள்ள அனுமதி உள்ளது. அதைத் தவிர சர்வதேச விண்வெளி நிலையத்தில் வாரம் ஒருமுறை திரைப்படம் பார்க்கவும், அவர்களின் குடும்பத்தினருடன் பேசுவதற்கும் ஏற்பாடு செய்யப்படும்.

மனிதர்களை விண்வெளிக்குச் சுற்றுலா அனுப்பவும் திட்டங்கள் தீட்டப்பட்டுக் கொண்டிருக்கின்றன. இதுவரை ஏராளமானோர் தங்களின் பெயரைப் பதிவுசெய்து முன்பணமும் செலுத்தியுள்ளனர். இன்னும் சில ஆண்டுகள் பொறுத்திருங்கள். 'வாங்கோவன் வீக் எண்ட் ட்ரிப்பாக விண்வெளிக்குப் போய் வரலாம்' என்ற நிலையும் வந்துவிடும்.

# வாரப்பலன்

## மேடம்
பணிகளை புதிய யுக்தியுடன் செயல்படுத்துவீர்கள். உறவினர்களின் வருகையால் குடும்பத்தில் மகிழ்ச்சி கூடும். சீரான ஓய்வு உடல் ஆரோக்கியத்தைப் பாதுகாக்கும். வியாபாரத்தில் அளவான லாபம் கிடைக்கும். மாணவர்களுக்கு நன்மை தரும் வாரம்.

## ரிஷபம்
மனதில் உத்வேகமும் செயல்களில் வசீகரமும் ஏற்படும். குடும்பத்தில் ஒற்றுமை உண்டாகும். பிள்ளைகளின் விருப்பங்களை நிறைவேற்றுவீர்கள். உறவினர் நல்ல ஆலோசனை சொல்வர். எதிரியால் இருந்த தொந்தரவு ஓரளவு குறையும். வியாபாரம் அபரிமிதமான வளர்ச்சி பெறும்.

## மிதுனம்
எதிர்பார்ப்பு நிறைவேறத் தாமதம் ஆகலாம். அனுபவசாலியின் ஆலோசனையால் நன்மை கிடைக்கும். இயந்திரப் பணியாளர்கள் பாதுகாப்பு நடைமுறைகளில் கவனமாக இருக்கவும் பெண்கள் ஆன்மிக சிந்தனையுடன் செயல்படுவர்.

## கடகம்
சாமர்த்தியமாக செயல்பட்டு வெற்றி காண்பீர்கள். தொழிலில் நிலுவைகள் எளிதாக வந்து சேரும். இயன்ற அளவில் அறப்பணி செய்வீர்கள். நண்பர்களின் அன்பும், ஆதரவும் கிடைக்கும். குடும்பத்தில் கொண்டாட்டம் நிகழும்.

## சிம்மம்
உங்களைச் சிலர் குறை சொல்வர். பணியில் மட்டும் கவனம் செலுத்துவது நல்லது. வியாபாரத்தில் இருந்த இடையூறு விலகும். லாபம் படிப்படியாக உயரும். குடும்ப செலவில் தாராளமாக இருக்கும். பிள்ளைகளால் உதவி உண்டு.

## கன்னி
சந்தோஷம் மனதில் குடியிருக்கும். பொதுநலப் பணிகளில் ஈடுபடுவீர்கள். சமூகத்தில் அந்தஸ்து உயரும். வியாபாரத்தில் அபிவிருத்திப் பணிகள் நிறைவேறும். பணியாளர்கள் முன்னேற்றம் காண்பர். பெண்களுக்கு அவர்கள் ஆசைகள் நிறைவேறும் நாள்.

## துலாம்
உறவினர் அனுகூலமாக நடந்து கொள்வர். மனதில் கூடுதல் நம்பிக்கை வளரும். வியாபாரத்தில் இலக்கு திட்டமிட்டபடி நிறைவேறும். குடும்பத்தில் சுபச்செலவு செய்து மகிழ்வீர் கள். நண்பர்களால் உதவி உண்டு. புதிய பொருட்கள் வாங்க உகந்த வாரம்.

## விருச்சிகம்
நண்பர், உறவினரின் பாராட்டு கிடைக்கும். குடும்பத்தில் சுப நிகழ்வு ஏற்படும். ஆடம்பரச்செலவை தவிர்ப்பது நல்லது. பொது விவகாரங்களில் கருத்து சொல்ல வேண்டாம். பிள்ளைகளின் ஆர்வம் மிகுந்த செயல் நிறைவேற உதவுவீர்கள்.

## தனுசு
மனதில் சிறு அளவில் குழப்பம் ஏற்படலாம். வாய்ப்புகளை தவறாமல் பயன்படுத்த வேண்டும். புதிய சொத்து வாங்குபவர்கள் ஆவணமாக்கலில் அவதானமாக இருக்கவும். பிள்ளைகளின் நற்செயல் நிறைவேற உதவுவீர்கள். பணப்பரிவர்த்தனையில் பாதுகாப்பு வேண்டும்.


## மகரம்
உறவினர்களிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். திட்டமிட்ட பணிகள் சிறப்பாக நிறைவேறும். நற்பெயரும் புகழும் தேடி வரும். வாகனத்தின் பயன்பாடு அதிகரிக்கும். உடல் ஆரோக்கியம் பலம் பெறும். வழக்கு விவகாரத்தில் வெற்றி கிடைக்கும்.

## கும்பம்
பெரும்பான்மை கிரகங்களால் அளப்பரிய நன்மை கிடைக்கும். மனதில் புத்துணர்வு ஏற்படும். உடன்பிறந்தவருக்கு உதவுவீர்கள். பூர்வ சொத்தில் வளர்ச்சியும் வருமானமும் கூடும். பிள்ளைகள் நேர்மறை எண்ணங்களுடன் செயல்படுவர்.


## மீனம்
நண்பரிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். சமூக நிகழ்வு மனதில் நல்ல மாற்றம் தரும். வெளியூர் பயணம் பயன் அறிந்து மேற்கொள்ளலாம். உடல் ஆரோக்கியம் சீராகும். மனைவியின் ஜாதகம் அதிர்ஷ்டகரமான பலன்களை தரும்.



கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தில் நடைபெற்ற அவசரக் கூட்டத்தில் கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டத்தில் நேர்ந்துள்ள அனர்த்தம் தொடர்பாகக் கலந்துரையாடப்பட்டது.



மட்டக்களப்பு மாவட்டத்தில் ஐந்தாம் தரப் புலமைப்பரீட்சையில் சித்தியடைந்தவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வினை பெரிய கல்லாறு மத்திய விளையாட்டுக் கழகத்தினர் நடத்தியுள்ளனர்.



ஜனநாயகத்திற்கான இளைஞர் அமைப்பின் ஏற்பாட்டில் வவுனியாவில் சர்வாதிகாரிகளை நிராகரிப்போம் என்னும் தொனிப்பொருளில் விழிப்புணர்வு ஊர்வலமொன்று இடம்பெற்றது.



வவுனியாவில் வடக்கு, கிழக்கு ஆசிரியைகளுக்குச் சான்றிதழ் வழங்கும் நிகழ்வு சில தினங்களுக்கு முன்னர் ஜேசுவிட் நல்லிணக்க ஒருமைப்பாட்டு பணியமைப்பின் இயக்குனர் எஸ்.பெனடிக்ற் தலைமையில் இறம்பைக் குளத்தில் நடைபெற்றது. பெண்களால் பெண்களுக்கு என்பதே அன்றைய விழாவின் தொனிப்பொருள்.



கரைச்சிப் பிரதேசசபையினுடைய உத்தியோகத்தர்களும், உறுப்பினர்களும் வெள்ளத்தில் சிக்கிய மக்களுக்கான மீட்புப் பணிகளை மேற்கொண்டு வருகின்றனர்.



வவுனியா தமிழ் மகாவித்தியாலய க.பொ.தா உயர்தரத்தில் 1998 ஆம் ஆண்டு கற்ற மாணவர்களின் நம்பிக்கை நிதியத்தினால் வசதியற்ற 50 மாணவர்களுக்குக் கற்றல் உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டுள்ளது.

ஹலோ குட்டீஸ்
தொகுப்பு - ஏஜேஜி -
புதுமதி

# முரசொலியும் நரியும்



ஒரு நரி பசியினால் இரை தேடித் திரிந்து கொண்டிருந்தது. அப்போது ஒரு பெருஞ் சத்தம் கேட்டது. அதைக் கேட்டதும் நரிதாக பெரிதாகப் பயப்பட்டது. தன்னைப்போல வேறு பெரிய மிருகம் ஏதாவதுஇரைதேடிப் புறப்பட்டு வருகிறதோ என்று நினைத்து மனம் கலங்கியது. எப்படியோ அது என்ன என்று அறியும் ஆவலில், மனதை ஓரளவு திடப்படுத்திக் கொண்டது. மெல்ல மெல்ல காட்டைச் சுற்றி வந்த நரி, ஒலி வந்த திசையை நோக்கி நடந்தது. நரி இறுதியாக ஒரு பெரு வெளியைச் சென்றடைந்தது. அங்கு எவருமே இல்லை. ஆனால் ஒலி அங்கிருந்தே வந்தது. நரி தொடர்ந்து நடந்து சென்றது . ஒரு மரத்தடியில் பழைய போர் முரசு ஒன்று கிடந்ததைக் கண்டது. அதற்கு நேரே மேலே இருந்த மரக்கிளை காற்றில் மேலும் கீழுமாக அசையும்போது, அந்த முரசைத் தாக்கியதால்தான் இந்த ஒலி ஏற்பட்டதென நரி அறிந்து கொண்டது. இதை நேரில் கண்ட பிறகு அட இந்தத் தோல் முரசுக்கா இவ்வளவு பயப்பட்டேன் என்று நினைத்தபடி, நரி அங்கிருந்து போய்விட்டது.

**எப்பொழுதுமே சரியான காரணம் தெரிந்து விட்டால், பல பிரச்சினைகள் அகன்று விடுகின்றன.**



# இருந்த பழமொழியும் திரிந்த பழமொழியும்

**திரிந்தது**

1. அற்பனுக்கு வாழ்வு வந்தால் அர்த்தராத்திரியில் குடை பிடிப்பான்

**இருந்தது**

அர்ப்பணித்து வாழ்ந்து வந்தால் அர்த்த ராத்திரியிலும் கொடை கொடுப்பான்.

**திரிந்தது**

2. குரைக்கிற நாய் கடிக்காது

**இருந்தது**

குழைகிற நாய் கடிக்காது.

# விடுகதை நேரம்


1. வெளிச்சத்தில் பிடிபட்டவனுக்கு இரவில் விடுதலை. அவன் யார்?
2. வேரில்லை முளைத்திருக்கிறது. இலையில்லை. கிளையுண்டு. அது என்ன?
3. வெளியில் இருப்பவனைத் தொட்டால் உள்ளே இருப்பவன் அலறுவான். யார் அவன்?
4. வெந்து கரியாகி விருந்து படைப்பான். அவன் யார்?
5. வெடித்துச் சிதறியவன் உடுத்த வேண்டியதைத் தருவான். அவன் யார்?

விடுகதைகள்!




**பதில்கள்**

1. போட்டோ,
2. மான் கொம்பு
3. அழைப்பு மணி
4. விறகு 5. பருத்தி



# மயிலே குயிலே

**மயிலே, மயிலே ஆடிவா**
**மக்காச் சோளம் தருகிறேன்!**
**குயிலே, குயிலே பாடிவா**
**கோவைப் பழங்கள் தருகிறேன்!**

**பச்சைக் கிளியே பறந்துவா**
**பழுத்த கொய்யா தருகிறேன்!**
**சிட்டுக் குருவி நடந்துவா**
**சட்டை போட்டு விடுகிறேன்!**

**ஓடைக் கொக்கு இங்கே வா**
**ஓடிப் பிடித்து ஆடலாம்!**
**மாடப் புறாவே இறங்கிவா**
**மடியில் குந்திப் பேசலாம்!**

# குறளும் செய்தியும்

**குறள் 783:**

**நவில்தொறும் நூல்நயம் போலும்**
**பயில்தொறும் பண்புடையாளர் தொடர்பு**

**மு. வரதராசன் உரை:**

பழகப் பழக நற்பண்பு உடையவரின் நட்பு இன்பம் தருதல், நூலின் நற்பொருள் கற்கக் கற்க மேன்மேலும் இன்பம் தருதலைப் போன்றதாகும்.



**மு. கருணாநிதி உரை:**

படிக்கப் படிக்க இன்பம் தரும் நூலின் சிறப்பைப் போல் பழகப் பழக இன்பம் தரக்கூடியது பண்புடையாளர்களின் நட்பு.

# அறிவோம் தெளிவோம்

## பகலில் வெளிச்சம் இரவில் இருட்டு ஏன்?

விளக்கு வெளிச்சத்தின் முன்னால் ஒரு பந்தைப் பிடியுங்கள். பாதிப் பக்கம் வெளிச்சம் படும். மறுபாதியில் இல்லை. வெளிச்சமாக இருக்கும் பகுதியில் ஒரு புள்ளியை வைத்து விட்டு பந்தைத் திருப்புங்கள். இப்பொழுது இருளாக இருந்த பகுதி வெளிச்சமாகத் தெரியும். புள்ளி வைத்த பகுதி இருளாகி விடும். நாம் வாழும் பூமியும் ஒரு பம்பரத்தைப் போல சுற்றிக்கொண்டே இருக்கின்றது. சூரியன் விளக்கு மாதிரி பிரகாசித்துக் கொண்டிருக்கின்றது. பந்தின் மீது புள்ளி வைத்த இடந்தான் நாம் வசிக்கும் இடம். வெளிச்சம் விழுந்தால் பகல். இல்லையென்றால் நமக்கு இரவுதான். பூமியின் அடுத்த பாதியில் இருப்பவர்களுக்கு பகலாக இருக்கும்.

# தமிழ் கொஞ்சம் கற்போம்

**1.எழுவாய்**




எழுவாய் என்பது ஒரு வசனத்தில் யார், எது, எவை என்பதின் பதில் ஆகும். ஆகவே, எழுவாய் என்பது ஒரு செயலைச் செய்யும் கருத்தாவைக் குறிப்பது ஆகும்

எ.கா:

சிவா பந்து விளையாடினான். இதில் "சிவா" எழுவாய் ஆகும்

**2.செயப்படுபொருள்**

ஒரு வசனத்தில் யாரை ,எதை அல்லது எவற்றை என்பதின் பதில் ஆகும். செய்படுபொருள் என்பது எழுவாய் செய்யும் தொழிலின் பயனை அடைவது ஆகும்

எ.கா:

சிவா பந்து விளையாடினான். இந்த வசனத்தில் பந்து செய்படுபொருள் ஆகும்


**3. பயனிலை**

ஒரு வசனத்தில் பொருள் முடிந்து நிற்கும் வினைச் சொல் (வினை முற்று) பயனிலை எனப்படுகிறது

எகா:


சிவா பந்து விளையாடினான். இந்த வசனத்தில் விளையாடினான் பயனிலை ஆகும்

# போர்க்கலை




போர்க்கலைப்படி,ஒரு படைவீரன் இன்னொரு படைவீரனிடம் மட்டுமே சண்டையிடவேண்டும். ஒரு தளபதி இன்னொரு தளபதியிடம் மட்டுமே சண்டையிட வேண்டும்.எதிராளியிடம் எந்த ஆயுதமும் இல்லாவிட்டால்,அவனிடம் போரிடக்கூடாது. காலை சூரிய உதயத்திலிருந்து மாலை சூரிய உதயம் வரை மட்டுமே போரிட வேண்டும்.மதியம் சுமார் இரண்டு மணி நேரம் போர் இடைவேளை.போர் நடக்கும்போது,போரில் காயம் பட்டு வீழ்பவர்களை இரண்டு நாட்டு ராணுவத்தைச் சேர்ந்த முதலுதவி அணியினர் தூக்கிச் செல்லலாம்.யாரும் அவர்களை தாக்கக் கூடாது.(இந்த விதிகளை இன்றைய நாகரிக அரசாங்கங்கள் ஏதாவது பின்பற்றுகின்றனவா?)

# கைதூக்கிவிடுவார் பிள்ளையார்



**சைவ** மக்கள் வாழும் இடமெங்கும் இருக்கும் சிறப்பு எங்கு பார்த்தாலும் பிள்ளையார் கோயில்கள் இருப்பதே. 'கோயில்' என்று பெயர் வைத்து விமானமும் கூரையும் போட்டுக் கட்டிடம் எழுப்ப வேண்டும் என்பதுகூட இல்லாமல், அரச மரத்தடிகளிலேயே வானம் பார்க்க அமர்ந்திருக்கும் சுவாமி நமது பிள்ளையார்.


தெருவுக்குத் தெரு ஒரு பிள்ளையார் கோயில், நதிக் கரைகளில் பிள்ளையார், மரத்தடிகளில் பிள்ளையார் என்றிப்படி இந்தத் தமிழ் தேசம் முழுவதும் அவர் வேறெந்த சுவாமிக்கும் இல்லாத அளவுக்கு இடம் கொண்டு அருள் பாலித்து வருகிறார். அவரைப் 'பிள்ளையார்' என்றே அன்போடு கூறுவது தமிழருக்கே உரிய வழக்கம்.

சர்வலோக மாதா பிதாவாகிய பார்வதி - பரமேசுவரரின் ஜேஷ்ட புத்திரர் அவர். 'பிள்ளை' என்றால் அவரைத்தான் முதலில் சொல்ல வேண்டும். வெறுமனே 'பிள்ளை' என்று சொல்லக் கூடாது என்பதால் மரியாதையாகப் 'பிள்ளையார்' என்று சொல்வது தமிழின் சிறப்பு.

'குமாரன்' என்றால் 'பிள்ளை' என்றே அர்த்தம். குமாரன், குமாரசுவாமி என்றால் பார்வதி பரமேசுவரரின் இளைய பிள்ளையான சுப்பிரமணியரைக் குறிக்கும். குமரக் கடவுள்' என்கிறோம் ஆனால், அவரைக் 'குமரனார்' என்பதில்லை: 'குமரன்' என்றுதான் சொல்வார்கள். மூத்த பிள்ளைக்கே மரியாதை தோன்றப் பிள்ளையார் என்று பெயர் தந்திருக்கிறோம்.

முதல் பிள்ளை இவர்: குழந்தை சுவாமி. ஆனாலும் இவரே எல்லாவற்றுக்கும் ஆதியில் இருந்தவர். பிரணவம்தான் எல்லாவற்றுக்கும் முதல். பிரணவத்திலிருந்துதான் சகல பிரபஞ்சமும் ஜீவராசிகளும் தோன்றின. அந்தப் பிரணவத்தின் ரூபமே பிள்ளையார். அவரது ஆனைமுகம், வளைந்த தும்பிக்கை இவற்றைச் சேர்த்துப் பார்த்தால் பிரணவத்தின் வடிவமாகவே தோன்றும்.

குழந்தையாக இருந்துகொண்டே ஆதிமுதலின் தோற்றமாக இருக்கிற பிள்ளையார் குழந்தைபோல் தோன்றினாலும், பக்தர்களை ஒரேயடியாகக் கைதூக்கி உயர்த்தி விடுவதிலும் முதல்வர்.



## இறைவனுக்கு உகந்தவராவோம்

சிறுவன் ஒருவன் சாலையோரமாக நடந்து சென்று கொண்டிருந்தான். அப்போது ஓரிடத்தில் தரையில் கிடந்த 100 ரூபாயைக் கண்டெடுத்தான். அது அவனுக்கு மிகுந்த மகிழ்ச்சியைத் தந்தது. எனவே அவன் அதை தன்னுடைய பெற்றோரிடம் காட்டி அளவற்ற மகிழ்ச்சியடைந்தான். அப்போது அவன் யோசித்துப் பார்த்தான். இன்றுபோல எப்போதும் கீழே பார்த்துக் கொண்டு நடந்தால் நிறையப் பணம் கண்டெடுக்கலாம் என்று நினைத்தான். எனவே அன்றுமுதல் அவன் எங்கே சென்றாலும் கீழே பார்த்துக்கொண்டே நடந்தான்.

காலங்கள் ஓடின. அந்தச் சிறுவனுக்கு 30, 40 வயது என்று ஏறிக்கொண்டே போனது. அப்போதும்கூட அவன் கீழே பார்த்தபடி நடப்பதை நிறுத்தவில்லை. எப்படியும் ஒருநாள் பெரிய பணப்பெட்டியோ, தங்கப்புதையலோ கிடைக்கும் அதைக்கொண்டு பெரிய ஆளாகிவிடலாம் என்பதே அவனது எண்ணமாக இருந்தது. அதனால் அவன் தொடர்ந்து கீழே பார்த்தபடியே நடந்தான். இப்படியே காலங்கள் செல்ல வயது அறுபதைத் தொட்டது. அப்போது, இதுவரை அவன் கீழே கண்டெடுத்த பணத்தையும் தங்கத்தின் மதிப்பையும் கணக்குப் போட்டுப் பார்த்தான். அது 20 ஆயிரத்துக்கும் குறைவாகவே இருந்தது. அப்போது அவன், "இந்த இருபதாயிரத்துக்கும் குறைவான பணத்துக்காகவா என் சுக துக்கங்களை மறந்து நடந்தேன்" என்று வருத்தப்பட்டுக் கொண்டான்.


இந்தக் கதையில் வரும் மனிதனைப் போன்றுதான் நாம் நம்முடைய வாழ்வில் எது முக்கியமோ அதற்கு முக்கியம் தராமல் நடந்து கொள்கிறோம். மாறாக, சிறு சிறு காரியங்களுக்கும் சிற்றின்பத்துக்கும் முக்கியத்துவம் கொடுத்து வாழ்க்கையைத் தொலைத்து நிற்கிறோம். அப்படிப்பட்ட வாழ்க்கையை வாழாமல், நமது வாழ்வில் இறைவனுக்கு முக்கியத்துவம் கொடுத்து வாழ வேண்டுமென விவிலியத்தில் கூறப்பட்டுள்ளது.

# சுமைகளை பகிர்தல்

நபிகளார் ஒருநாள் இரவு மக்காவின் தெரு வழியாகச் சென்று கொண்டிருந்தார். மக்கள் நடமாட்டமில்லாத ஓரிடத்தில் ஒரு மூதாட்டி மூட்டைகளுடன் தூக்க இயலாச் சுமைகளோடு நின்று கொண்டிருந்தார்

அந்த மூதாட்டியிடம் நபி (ஸல்), "தாங்கள் எங்கே செல்ல வேண்டும்?" எனக் கேட்டுச் சுமைகளை தன் தலை மீது வைத்துக்கொண்டார். இருவரும் நடந்து செல்லும்போது, "இந்த இரவு நேரத்தில் தூக்க இயலாத சுமைகளோடு எங்கே செல்கிறீர் கள்?" என அண்ணலார் கேட்டார்.

"இந்த ஊரில் யாரோ முஹமது என்பவர், புதிய கொள்கை ஒன்றைக்கூறி மக்கள் மனதை மாற்றி வருகிறாராம். எங்களது மூதாதையர் வணங்கி வந்த தெய்வங்களை எல்லாம் வணங்கக் கூடாது என்கிறாராம். அல்லாஹ் ஒருவரை மட்டுமே வணங்கி வழிபட வேண்டுமென்று சொல்கிறாராம். நான் அவரைப் பார்த்ததுகூட இல்லை. எனவே நான் அந்த முஹமதை சந்தித்தால், மனம் மாறி எங்களது மூதாதையரின் கொள்கைகளை விட்டு விடுவேனோ என்ற அச்சத்தால் தான், இந்த ஊரை விட்டே செல்ல இருக்கிறேன்" என்று படபடவெனப் பொரிந்து தள்ளினார் அந்த மூதாட்டி.



நபிகளார் தலைச் சுமையோடு ஊருக்கு வெளியே மூதாட்டியுடன் நடந்து செல்லும்போது ஒரு குறிப்பிட்ட இடம் வந்ததும் அந்த மூதாட்டி, "போதும், இனி நான் தனியாகப் பிரயாணம் செய்து கொள்வேன். நீங்கள் என்னுடன் வர வேண்டாம்" எனக் கூறிவிட்டு,

"ஆமாம், இந்த இரவு நேரத்தில் நான் தங்களிடம் உதவி கேட்காமலேயே எனக்கு உதவி செய்தீர்களே, தாங்கள் யார்? " என்று கேட்டார் மூதாட்டி.

" நீங்கள் இவ்வளவு நேரம் எந்த முஹமதைப் பற்றிக் கூறி, அவரை சந்திக்கவே கூடாது என்று இந்த ஊரை விட்டே வெளியேறுகிறீர்களோ, அந்த முஹமது (அல்லாஹ்வின் தூதர்) நான்தான்" என நபிகள் நாயகம் பணிவாகக் கூறி முடித்தார்.

அந்த மூதாட்டி, நபியின் அன்பைக் கண்டு பெரிதும் ஆச்சரியமடைந்தார்.

புதுவிதி PUTHU VITHI

# 100ஆவது இதழ் நிறைவை முன்னிட்டு ந

## சிறுகதை, கவிதை, கட்டுரைப் போட்டிகள

**ஒவ்வொரு பிரிவிலும் 1ஆம், 2ஆம் 3ஆம் இடங்களைப் பெறுபவர்களுக்கு பணப்பர பரிசும் வழங்கப்படும். பாராட்டுப் பரிசு பெறுவோருக்கு புத்தகப் பரிசுகள் வழ**

### சிறுகதைகள்

**01) முதலாம் இடம்**
பொ.பாபு
பொ.சகாயம் (பாபு)
179/399, 7ஆம் ஒழுங்கை,
வசந்தபுரம், திருநாவற்குளம், வவுனியா.

**02) இரண்டாம் இடம்**
கண்ணதாசன்
ஈழநல்லூர்

**03) மூன்றாம் இடம்**
திருமதி ரேணுகா செயரூபன்
வ/நெளுக்குளம் க.ம.வி., வவுனியா

### சிறப்புப் பாராட்டுப் பரிசு

*01)* பொ.சிந்தியா
உதயன் ஜான்சி வீடியோ
பள்ளிவாசல் வீதி, மன்னார்

*02)* புகழ்
89, இரண்டாம் குறுக்குத்தெரு
மணியம்தோட்டம், யாழ்ப்பாணம்

*03)* லோஜிதா முரளிதரன்
நெல்லியடி வடக்கு, கரவெட்டி

### பாராட்டுப் பரிசு

*01)* திருமதி அற்புதராணி காசிலிங்கம்
89/1, இராசவீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம்

*02)* கண்ணதாசன்
ஈழ நல்லூர், யாழ்ப்பாணம்

*03)* டிலக்ஷ்ண்ணா சுந்தரலிங்கம்
29/1 கருவேலடி லேன், கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.

*04)* சி.சோமேஸ்வரபிள்ளை
37/3 மானிப்பாய் வீதி, தாவடி, கொக்குவில்

*05)* சுதாகரன் யோணகரன்
28, ஹெலன்காமம் வீதி,
சங்குவேலி தெற்கு, மானிப்பாய்

*06)* T.ஜனியா
மண்டுவில் அம்மன் கோயில் வீதி,
சாவகச்சேரி வடக்கு, சாவகச்சேரி

*07)* புகழ்
89, 2ஆம் குறுக்குத் தெரு,
மணியம்தோட்டம், யாழ்ப்பாணம்

*08)* ந.பிரசாந் - திருமதி தாரிணி சதீஸ்கரன்
கந்தசாமி கோவிலடி, கோப்பாய் மத்தி, கோப்பாய்.

*09)* ரிஷோபிகா செயரூபன்
வ/இறம்பைக்குளம் ம.வி. வவுனியா

*10)* கே.எஸ்.சிவஞானராஜா
115/1 ஆடியபாதம் வீதி, கொக்குவில் மேற்கு,
கொக்குவில்

*11)* தேனூர் கௌசிகன்
பாடசாலை வீதி, தேத்தாத்தீவு 01
களுவாஞ்சிக்குடி, மட்டக்களப்பு

### கவிதை

**01) முதலாம் இடம்**
மாதவி உமாசுதசர்மா
21/1A பாடசாலை வீதி,
கோண்டாவில் மேற்கு, கோண்டாவில்

**02) இரண்டாம் இடம்**
திருமதி ரேணுகா செயரூபன்
வ/நெளுக்குளம் மகாவித்தியாலயம், வவுனியா

**03) மூன்றாம் இடம்**
தேனூர் கௌசிகன்
பாடசாலை வீதி, தேத்தாத்தீவு 01
களுவாஞ்சிக்குடி, மட்டக்களப்பு

செல்வி ரிஷோனா செயரூபன்
வ/இறம்பைக்குளம் ம.வி.
271, 1ஆம் ஒழுங்கை, உக்குளாங்குளம் வவுனியா

### பாராட்டுப் பரிசு

*01)* கண்ணதாசன்
ஈழநல்லூர்

*02)* கண்ணதாசன்
ஈழநல்லூர்

*03)* தேனூர் கௌசிகன்
தேத்தாத்தீவு, களுவாஞ்சிக்குடி

*04)* தமிழ் நேசன் (புயல்)
18, இலந்தைக்குளம் வீதி, அரியாலை, யாழ்ப்பாணம்.

*05)* அட்சயா மதிமோகன்
46, சந்தனமாதா கோயில் 2ஆம்
ஒழுங்கை, சுண்டிக்குளம், யாழ்ப்பாணம்.

*06)* தெய்வேந்திரன் மிதிலா மாறன்
ஆசிரியர்வள நிலைய வீதி, மறக்காரம்பனை, வவுனியா

*07)* சாதுரியா சிவபாலன்
மே/பா, சு.ஆறுமுகதாஸ்
ஈவினை மத்தி, புன்னாலைக்கட்டுவன்
(பலாலி தெற்கு, வசாவிளான்)

*08)* விக்னேஸ்வரன் சுயந்தன்
முன்பள்ளி வீதி, மறக்காரம்பனை, வவுனியா.

*09)* தமிழ்நேசன்
இலந்தைக் குளம் வீதி, அரியாலை, யாழ்ப்பாணம்

*10)* தேனூர் கௌசிகன்
பாடசாலை வீதி, தேத்தாத்தீவு 01
களுவாஞ்சிக்குடி, மட்டக்களப்பு

*11)* க.பாவலன்
அறிவாலையம், வீமன்புலம்
இமையாணன் கிழக்கு, உடுப்பிட்டி,
வல்வெட்டித்துறை.

*12)* ரஜிதா சுரேஸ்குமானர்
கிளிநொச்சி இராமநாதபுரம் ம.வி.

*13)* ஈழநல்லூர் கண்ணதாசன்

### கட்டுரை உ

**01) முதலா**
யோகர
யாழ். ப

**02) இரண்**
ஜே.ஜா
கிளி/இ

**03) மூன்ற**
கணேச
புதுக்கு

### பாராட்டுப் பரி

*01)* புவனே
கிளி/இ

*02)* ரிசோபி
இறம்ப

*03)* ஜெனிப
வேம்ப

*04)* அ.கனி
கிளி/இ

*05)* கிருஷ்
புதுக்கு

*06)* சுதாகர
கிளி/இ

### கட்டுரை சா

**01) முதலா**
சரண்ய
யாழ். ப

**02) இரண்**
அரவிந்
யாழ். இ

**02) இரண்**
ஹென்
கிளி/ இ

### சிறப்புப் பாரா

*01)* கனகரா
கொடிக

*02)* உதயதா
மீசாலை

*03)* அக்ஷய
கிளி/இ

### பாராட்டுப் பரி

*01)* அ.நியூ
நெடுந்

*02)* த.பிரசா
கந்தசா

தயவு செய்து பரிசுகளுக்காகத் தெரிவுசெ
விலாசத்தையும், தொலைபேசி இலக்கத்தை
பின்வரும் முகவரியுடன்

**புதுவிதி, 107, இராசவீதி, தி**

டு நடத்தப்பட்ட
டிகளின்
ளப்பரிசும், புத்தகப்
ர் வழங்கப்படும்

ர உயர்தர வகுப்பு

முதலாம் இடம்
யோகரட்ணம் பானுஷியன்
யாழ். மத்திய கல்லூரி

இரண்டாம் இடம்
ஜே.ஜார்னிஜா
கிளி/இராமநாதபுரம் ம.வி.

மூன்றாம் இடம்
கணேசலிங்கம் ஜீவனா
புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி

டுப் பரிசு
புவனேஸ்வரன் கஜலக்சி
கிளி/இராமநாதபுரம் ம.வி.

ரிசோபிகா செயறூபன்
இறம்பைக்குளம் ம.ம.வி.

ஜெனிபா கில்பேட் குணம்
வேம்படி மகளிர் கல்லூரி

அ.கனிஸ்ரா
கிளி/இராமநாதபுரம் ம.வி.

கிருஷ்னகா கபிலன்
புதுக்குளம் ம.வி., சாஸ்திரிகூளாங்குளம்

சுதாகரன் கிருத்திகா
கிளி/இந்து ம.வி.

ர சாதாரண தரம்

முதலாம் இடம்
சரண்யா விக்னேஸ்வரன்
யாழ். மகாஜனக் கல்லூரி

இரண்டாம் இடம் :
அரவிந்தன் அபர்நாத்
யாழ். இந்துக் கல்லூரி

இரண்டாம் இடம் :
ஹென்றிபோல் அஜந்தன் நிவேதிகா
கிளி/ இராமநாதபுரம் ம.வி.

பாராட்டுப் பரிசு
கனகராசா தமிழ்ச்செல்வன்
கொடிகாமம் திருநாவுக்கரசு ம.வி.

உதயதாஸ் கீர்த்தனா
மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி

அக்ஷயா ஜெயக்குமார்
கிளி/இராமநாதபுரம் ம.வி.

டுப் பரிசு
அ.நியூட்டன்
நெடுந்தீவு மகா வித்தியாலயம்

க.பிரசாந்த்
கந்தசாமி கோயிலடி, கோப்பாய் மத்தி

தெரிவுசெய்யப்பட்ட படைப்பாளிகள் தமது தபால் க்கத்தையும் குறிப்பிட்டு எம்முடன் கடிதம் மூலம் ரியுடன் தொடர்புகொள்ளவும்.

தி, திருநெல்வேலி - கோப்பாய்.

# தென்னமரவாடி

## பேரினவாதம் விழுங்கும் தமிழர் நிலம்



தமிழ் மக்கள் மீதான இன அழிப்பு போரின் போதும் அதற்குப் பின்னரான காலப் பகுதியிலும் தமிழர்களின் பூர்வீக நிலங்கள் இராணுவத்தாலும், அரசாங்கத்தாலும் அபகரிக்கப்பட்டுவருகின்றது. இந்நிலையில் பௌத்த - சிங்கள பேரினவாத ஆக்கிரமிப்பில் இருந்து தமது பூர்வீக நிலமான தென்னமரவாடி கிராமத்தைப் பாதுகாப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு அப்பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

தென்னமரவாடி கிராமம் கிழக்கு மாகாணத்தின் திருகோணமலை - குச்சவெளி பிரதேச செயலர் பிரிவில் உள்ளது. 'தென்னன் மரபு அடி" என அழைக்கப்பட்டு தென்னமரவாடி எனத் திரிபடைந்தது. காலங்காலமாக அரசின் அடக்குமுறைகளாலும் பௌத்த - சிங்கள பேரினாலும் பாதிக்கப்பட்டு பல்வேறு இன்னல்களின் மத்தியில் வாழ்ந்து வருகின்றனர். மக்கள், தமது பகுதியிலுள்ள கந்தசாமி மலையையும் அங்குள்ள முருகன் ஆலயத்தையும் தொல்பொருள் திணைக்களம் மற்றும் பௌத்த பேரினவாதிகளினதும் அபகரிப்பிலிருந்து காப்பாற்றுமாறு உரிய அதிகாரிகளிடம் கேட்டுள்ளனர்.

வரலாற்றுத் தொன்மை வாய்ந்த வளங்கள் நிறைந்த தென்னமரவாடி கிராமத்தின் பூர்வீகம் தொடர்பில் முதியவர் ஒருவர் தெரிவித்த கருத்துக்கள் வருமாறு: -

"திருகோணமலை - குச்சவெளி பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட (தென்னன் மரபு அடி) தென்னமரவாடி கிராமத்தில் தென்னன் என்ற அரசன் காலத்தில் இருந்த கந்தசாமிமலை மற்றும் அதன்மேல் உள்ள முருகன் ஆலயம் என்பன 1984 ஆம் ஆண்டு இங்கிருந்து தமிழ் மக்கள் இடம்பெயர்ந்து சென்ற பின்னர் அழிக்கப்பட்டுள்ளது. எனினும் மக்கள் மீண்டும் இப்பகுதியில் மீள்குடியேறியபோது குறித்த பகுதியில் முருகன் சிலை மற்றும் வேல் என்பவற்றை வைத்து வழிபாடுகளை மேற்கொண்டனர். இதன்போது பௌத்த பேரினவாதிகளால் அவை அழித்தொழிக்கப்பட்டன. இதன் பின்னர் குறித்த மலைப்பகுதியில் புத்தர் சிலை நிறுவுவதற்காக பௌத்த துறவிகள் வருகைதந்தபோது கிராம மக்கள் இணைந்து அவர்களைத் தடுத்து நிறுத்தினர்.

எனினும் இதன் பின்னர், இதில் தலையிட்ட பொலிஸார் தலையிட்டு இரண்டு தரப்பினரையும் குறித்த பகுதிக்கு செல்ல வேண்டாம் என தடை விதித்துள்ளனர். தற்போது குறித்த மலையடி வாரத்தில் தொல்பொருள் திணைக்களம் தமது பெயர்ப் பலகையை நாட்டி கட்டடம் ஒன்றை அமைத்து வருகின்றது. தமிழ் மக்களுக்குச் சொந்தமான குறித்த பகுதியை தொல்பொருள் திணைக்களம் அபகரித்து இவ்வூர் மலைக்கு செல்லவிடாது தடுத்து பௌத்த சிங்களவரின் புத்தர் சிலை வைக்கும் நடவடிக்கைக்கு துணைபோய்விடுவார்கள்.

இதனை உரிய தரப்பினர் கருத்திற்கொண்டு எமது மலையையும் எமது முருகன் ஆலயத்தையும் மீட்டுத்தந்து எமது ஆலயத்தில் வழிபாடுகளை மேற்கொள்வதற்கு வழியேற்படுத்தி தருமாறு கேட்டுக்கொள்கின்றோம்" எனக் குறிப்பிட்டார். இதேவேளை இந்த நில அபகரிப்பு குறித்து வினாசித்தம்பி தம்பியையா என்ற முதியவர் தெரிவித்த கருத்துக்கள்:

"1984 ஆம் ஆண்டு நாம் வன்செயல் காரணமாக இடம்பெயர்ந்து சென்றோம். அதுவரை நாங்கள் இந்த கந்தசாமி மலையில் இருந்த முருகன் ஆலயத்தில் வழிபாடுகளை மேற்கொண்டோம். அதனைத் தொடர்ந்து போரின் அழிவுகளைச் சந்தித்த நாம் 2010 ஆம் ஆண்டு மீண்டும் மீள்குடியேற்றம் வந்து குறித்த பகுதியில் வேல் ஒன்றை வைத்து வழிபட்டோம். எனினும் அதனைப் பிடுங்கி எறிந்தனர். அதனைத் தொடர்ந்து ஒரு முருகன் சிலை வைத்தோம். அதனை அடித்து உடைத்துப் போட்டிருந்தனர். அதனை மீளவும் நிறுவினோம். அதன் பின்னர் அந்த சிலை உடைக்கப்பட்டு சிலையையே காணவில்லை.

இவ்வாறு எமது ஆலயம் திட்டமிட்டு பெரும்பான்மை இனத்தவரால் உடைக்கப்பட்டு அழிக்கப்பட்டுவருகின்றது. இதனைத் தொடர்ந்து புத்தர் சிலை வைக்கும் முயற்சியில் ஏற்பட்ட குழப்பத்தில் யாரும் மலைக்குச் செல்லக்கூடாது என பொலிஸார் அறிவித்துவிட்டு தற்போது இவ்வாறான ஒரு செயலை செய்கின்றார்கள். இது உடனடியாக நிறுத்தப்பட வேண்டும். சம்மந்தப்பட்ட அதிகாரிகள் உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டும்" என்றார்.

இந்த விடயம் தொடர்பில் தென்னமரவாடி கிராம அபிவிருத்தி சங்க உபதலைவர் கந்தையா பரமநாதன் கூறுகையில்:


"நான் 1952 ஆம் ஆண்டு பிறந்து அன்றிலிருந்து இன்று என்னுடைய 76 வயது வரை இந்த தென்னமரவாடி கிராமத்திலேயே படித்து திருமணம் செய்து வாழ்ந்து வருகிறேன். இதுவரை எமது கிராமத்துக்கு ஒரு பௌத்த மதகுருவோ அல்லது வேறு முஸ்லிம் மதகுருவோ வந்ததில்லை. இற்றைக்கு சுமார் 300 வருடங்களுக்கு மேற்பட்ட முருகன் கோவில். இந்த கோவிலுக்கு தொன்மையான வரலாறு உண்டு. இது ஒரு வரலாறு படைத்த மலை. 1962 ஆம் ஆண்டு முதல் இந்த கோவிலில் நான் வழிபட்டு வந்திருக்கிறேன்.

இந்த இடத்தில் இந்த ஆலயத்தோடு இணைந்த எங்களது காணிகளுக்கு 1803 ஆம் ஆண்டு பிரித்தானியர் காலத்து அரசினால் உறுதிகள் வழங்கப்பட்டுள்ளன. அந்த ஆவணங்கள் எம்மிடம் உள்ளன. ஆகவே இது எமது பூர்வீக கிராமம் நாங்கள் 1984 ஆம் ஆண்டு இடம்பெயர்ந்து சென்ற பின்னர் இது பெரும்பான்மை இனத்தவரால் சுவீகரிக்கப்பட்டது. இந்த இடம் மாத்திரமல்ல எமது வயல் நிலங்கள் விவசாய நிலங்கள் எல்லாம் அபகரிக்கப்பட்டு இன்று போர் முடிந்து மீள்குடியேற்றம் வந்தும் எமது நிலங்களை மீட்க முடியாது திண்டாடுகின்றோம்.

இந்நிலையில் எமது இந்த வரலாற்றுத் தொன்மை மிக்க ஆலயத்தையும் அபகரிக்க இவ்வாறான நடவடிக்கைகளை மேற்கொள்கின்றனர். இவற்றைத் தடுத்து நிறுத்துவதற்கு அனைவரும் ஒன்றிணைய வேண்டும்" என வலியுறுத்தினார். தமிழர் தாயகப் பகுதிகளான வடக்கு கிழக்கு பிரதேசங்களெங்கும் சிங்களவர்களின் அத்துமீறிய குடியேற்றங்களிற்கு துணைபோகும் இலங்கைத் தொல்பொருள் திணைக்களத்தின் செயற்பாடு மிகவும் வன்மையாக கண்டிக்கத்தக்கது என பிரதேச மக்கள் விசனம் வெளியிட்டனர்.

■ உடுவில் அரவிந்தன்

# தீர்வு



அந்த நீண்ட வீதியில் நாட்டப்பட்டிருந்த மரக்கன்று களுக்குச் செல்லத்துரையர் அக்கம்பக்க வீடுகளிலிருந்து அள்ளியள்ளி நீர் ஊற்றுவதை ஊர் மக்கள் வியப்புடன் பார்த்துக் கொண்டிருந்தனர்.

'உந்த மனிசனுக்கு வேறை வேலை இல்லையோ? தன்ரை தறையை உழாமல் விசர் வேலை பாக்குது" என்று சிலர் சிரிப்பதையும் அவர் பொருட்படுத்தவில்லை. வாடிச் சுருண்டிருந்த மரக்கன்றுகள் நீர் பட்டதும் இலைகளைச் சிலிர்த்துக் கொண்டு நிமிர்ந்தன. செல்லத்துரையர் மனம் இலேசாகியிருப்பதை உணர்ந்தார்.

நேற்று நடந்த சம்பவங்கள் மெல்ல மெல்ல அவருடைய மனத்திரையில் வந்து மோதத் தொடங்கின.

● ● ●

கண்ணுக்கெட்டிய தூரம் வரை பரந்து விரிந்துகிடந்த அந்த வயலைச் செல்லத்துரையரின் கண்கள் ஏக்கத்துடன் பார்த்தன. வயல் காய்ந்து கருவாடாகிக் காட்சியளித்தது. உச்சி வெயிலில் புழுதி நிலம் பளபளத்துக் கண்களைக் கூச வைத்தது.

மெல்ல அருகிலிருந்த குளக்கட்டில் ஏறினார். குளத்தில் மருந்துக்குக்கூட நீரில்லை. குளக்கட்டோடு அணைந்திருந்த குண்டுகளில் மட்டும் கொஞ்சம் நீரிந்திருந்தது.

'இந்த முறை மழை பெய்யாதோ? பேசாமல் வயலை வித்துப்போட்டு நல்ல தோட்டக்காணியா வாங்குவம் எண்டாலும் மனம் வருகுதில்லை. என்ரை அப்பாவின்ரை காலத்து வயல் சோக்கான பள்ளக்காணி."

யோசித்தவாறு திரும்பிப் பார்த்தார்.

சிலர் புழுதி விதைப்பில் மும்முரமாக ஈடுபட்டிருந்தனர்.

மழையில்லா வேளையிலே விவசாயிகளுக்கு ஓரளவுக்கேனும் கை கொடுக்கும் முறை அது.

மெல்ல நடந்து கந்தையாவின் காணிப்பக்கம் வந்தார். கந்தையர் இவரது காணிக்கு அடுத்த காணிக் காரர். நல்ல பிரயாசிக்காரர். மூன்று பரப்புக் காணியில் என்னென்ன நட்டுப் பயன் எடுக் கலாமோ அத்தனையும் செய்வார்.

செல்லத்துரையரைக் கண்டதும் கந்தையர் மண்வெட்டியை வைத்து விட்டு வரம்பில் ஏறினார்.

'என்ன துரையண்ணை விதைக்கேல்லையோ?" என்றவாறு தலையிலே கட்டியிருந்த துவாயை அவிழ்த்து முகத்தை அழுந்தத் துடைத்துக் கொண்டார்.

'என்னடாப்பா செய்யிறது? போனமுறை பட்டபாடு காணாதே? வந்த வெள்ளம் எல்லாத்தையும் அள்ளிக் கொண்டு போச்சுது. இந்தமுறை என்னடாவெண்டால் மழையை இன்னும் காணேல்லை..."

'எல்லாம் பெய்யும்" கந்தையர் வாயிலே சுருட்டை வைத்துக் கொண்டார்.

'அவன் சின்னையாவைப் பார் கந்தையா. ஆள் விண்ணன்தான். இந்த வரியம் வயலுக்கை குழாய் அடிச்சிருக்கிறான். போனமுறை வெள்ளம் அடிச்சும் கவலையில்லாமத் திரியிறான்.", செல்லத்துரையரின் குரலில் இலேசான ஆதங்கம் தெரிந்தது.

'அவனுக்கென்ன? ரெண்டு பெடியன்கள் சுவிஸிலை. உவன் சும்மா பொழுதுபோக்குக் கெல்லோ தோட்டம் செய்யிறான். எங்களை மாதிரி இதை நம்பி இருக்க வேணும் எண்டில்லை..." இருமியபடி கந்தையர் சொன்னதை செல்லத்துரையர் தலையை ஆட்டி ஆமோதித்தார்.

'என்ரை வீட்டிலை மூண்டு குமர் இருக்குது. நான் என்னெண்டு காசு சேர்த்து...? இவளவை ஆரையாவது விரும்பினாலும் பேசாம செய்யுங்கோடி எண்டு விட்டிடலாம். அதுக்கும் துணியிறாளவையில்லை"

'ஒண்டுக்கும் யோசியாதையுங்கோ அண்ணை எல்லாம் நடக்கும்"

'உனக்கென்ன? நீ ஆறு பெடிய ளைப் பெத்திருக்கிறாய். அவங்கள் வளந்திட்டாங்கள் எண்டா சும்மா இருந்து சாப்பிடுவாய். ம்... அங்கை பார் அவன் ரத்தினம் வேலை செய்யாமல் பிராக்குப் பார்க்கிறான். நீ போய் அலுவலைப் பார். நான் வாறன்." என்றவாறு செல்லத்துரையர் திரும்பி நடந்தார்.

இக்கிரியும் கோரையும் மண்டிப் போய்க்கிடந்த தனது காணியைப் பார்த்தார். 'ஒரு சின்ன மழை பெய்தாலும் உழுதுபோடுவன். கடவுள்! இந்த முறை என்ன செய்யப்போறானோ?" எண்ணிய படி வரம்பிலிருந்து வீதியில் ஏறினார். வீதிச் சரிவிலே சாய்த்து வைக்கப்பட்டிருந்த சைக்கிளை நிமிர்த்தினார்.

அவரது வயற்காணி வீட்டிலிருந்து மூன்று மைல் தொலைவில் இருந்தது. வீட்டிற்கும் வயலுக்கும் ஒரேயொரு போக்குவரத்துப் பாதை அந்த நீண்ட வீதிதான். ஒல்லாந்தர் காலத்து வீதி. அநேக வளைவுகளுடன் அதைந்திருந்தது. எழுபத்தொன்பதிலே தார் போட்ட பின் இன்றுவரை செப்பனிடப்படாத வீதி அது. ஒருபுறம் வீதியுடன் சேர்ந்திருந்த வடிகால் பற்றைகள் வளர்ந்து மண் நிரம்பி அடைபட்டிருந்தது. இருபுறத்து வேலிகளும் நிலம் வரை வெட்டப்பட்டு வெட்டவெளியாக்கப் பட்டிருந்தது.

'அநியாயப்படுவார்... ஒரு மரந்தடியையாவது உருப்படியா இருக்க விட்டாங்களே. வீட்டுக்கு அச்சறுக்கையா வேலியைப் போட்டா அதை வெட்ட வைக்கிறது. எண்டைக்குத்தான் எங்களுக்கு நிம்மதி வரப்போகுதோ?" என்று செத்தல் சுப்பிரமணித்தினுடைய பேத்திக் கிழவி புலம்பியது இன்றும் செல்லத்துரையரின் காதுகளுக்குள் ஒலித்துக் கொண்டிருந்தது.

உண்மைதான் ஒரு கிராமத்தின் இயற்கை அங்குள்ள மரங்களிலும் பசுமையான வயல்களிலும்தான் தங்கியுள்ளது.

செல்லத்துரையர் யோசித்துக் கொண்டே சைக்கிளை உழக்கி னார். ஒழுங்கான இடைவெளி களில் நடப்பட்டிருந்த மலைவேம் புக் கன்றுகளைப் பார்த்தார். இரண்டு வருட முதிர்ச்சியில் நாலைந்தடி உயரத்திற்கு வளர்ந்திருந்தன. வெயிலின் அகோரத்திலே இலைகள் சுருண்டிருந்தன. வீசுகின்ற அனற் காற்றிலே அவை ஆடியபோது தண்ணீர் வேண்டி இரப்பது போல அவருக்குத் தோன்றியது.

உச்சி வெயில் மண்டையைப் பிளந்தது. ஒருவாறு வீட்டிற்கு வந்து சேர்ந்தார். சாய்மனைக் கதிரையிலே 'அப்பாடா" என்று சரிந்து கொண்டார்.

மனைவி பூரணம் மூக்குப் பேணி நிறைந்த தேநீருடன் வந்தாள். இவ்வளவு காலம் கடந்தும் அவர் மூக்குப்பேணியை விடவில்லை. அதிலே குடித்தால்தான் தேநீரே ருசிப்பதாகக் கூறுவார்.

மனைவி பூரணம் அடிக்கடி புறுபுறுப்பாள்.

'பெட்டையள் பீலிசிலை குடிக்கிறாளவை... இவர்தான் கண்டறியாத மூக்குப்பேணிக்கை குடிக்கிறார். கொஞ்சமெண்டாலும் நாகரிகம் தெரியாத மனிசன்" செல்லத்துரையர் மௌனமாகச் சிரிப்பார். வீண்சண்டைகளைத் தவிர்க்க அவர் கையாளும் முறை அதுான்.

தேநீரை வைத்துவிட்டு நிமிர்ந்தாள் பூரணம்.

'அவன் குமார் வந்திட்டுப் போறான். அடைவு வைச்ச கொடியை மீளட்டாம். வட்டியும் முதலும் நகையை முழுங்கப் போகுது" அவள் குரலில் கவலை தெரிந்தது.

அதைக் கண்டுகொண்ட செல்லத்துரையர் மெதுவாகச் சொன்னார். 'நானென்னப்பா செய்யிறது? இடையிடையிலை அங்கினை இங்கினை எண்டு வாற தரகுக் காசிலை சீவியம் போகுது. இனி நகைகளை மீளிதெண்டால் காணியைத்தான் விக்கவேணும்..."


'... றோட்டுக்கு வெளிக்கிடவே வெக்கமாக் கிடக்கு கழுத்திலை ஒரு சங்கிலி எண்டாலும் வேண்டாமே. என்ன கந்தறுந்த வாழ்க்கையப்பா?" சலித்துக்கொண்டாள் பூரணம்.

இஞ்சை பார் பூரணம் எங்கட மூண்டு பெட்டையளும் காதிலை கிடக்கிற தோட்டைத் தவிர ஏதாவது போட்டிருக்கிறாள வையே? இண்டு வரைக்கும் அதை வாங்கித்தா இதை வாங்கித்தா எண்டு கேக்கேல்லை.

(18ஆம் பக்கம் பார்க்க)

தொகுப்பு: ஏ.ஜே.ஞானேந்திரன்

# பிரமிப்பூட்டும் படம்!




இங்கிலாந்தைச் சேர்ந்த வன உயிரிகள் புகைப்படக் கலைஞர் ரிச்சர்ட் பௌலர். ஒரு பலகையில் 5 வகைவிலாங் குருவிக் குஞ்சுகள் குறிப்பிட்ட இடைவெளியில் அமர்ந்திருந்ததைப் பார்த்தார். தாய்ப் பறவை கொண்டு வந்த உணவைக் கண்டதும் 5 குஞ்சுகளும் ஒரே நேரத்தில் மஞ்சள் வண்ண வாயைத் திறந்தன. இந்தக் காட்சியைக் கச்சிதமாகப் படம் பிடித்துவிட்டார் ரிச்சர்ட்.

"தன்னுடைய 5 குழந்தைகளும் ஒரே நேரத்தில் உணவுக்காக வாயைத் திறக்கும்போது, ஒரு தாயால் என்ன செய்ய முடியும்? இந்தக் காட்சி என்னை உலுக்கிவிட்டது. பொதுவாக இந்தக் குருவிகள் ஒரு நேரத்தில் 3 முட்டைகளைத்தான் அடை காக்கும். இந்தக் குருவி 5 குஞ்சுகளைப் பொரித்திருக்கிறது. கொசு, ஈக்கள் போன்ற பூச்சிகளே இவற்றின் உணவு. சில நேரத்தில் ஒரு நாளைக்கு நூறு பூச்சிகளையாவது சாப்பிட வேண்டியிருக்கும். குஞ்சுகள் பறந்து, தாமாக உணவு தேடும்வரை தாயின் சுமை அதிகமாக இருக்கும்" என்கிறார் பௌலர்.

**படம் மட்டுமல்ல தாயின் அன்பும் பிரமிப்பூட்டுகிறது...!**

# அழகிய தேவதை



உலகின் மிக அழகான குழந்தை என்று கொண்டாடப்படுகிறாள் நைஜீரியாவைச் சேர்ந்த 5 வயது ஜேர். இவளது 3 படங்கள் இன்ஸ்டாகிராமில் வெளியிடப்பட்டு, உலகம் முழுவதும் பாராட்டுகளைப் பெற்று வருகிறது.

'ஜேருக்கு என்று சிறப்பாக எந்த விடயத்தையும் செய்யவில்லை. பெரிய கண்களும் பளபளக்கும் தோலும் அடர்த்தியான முடியுமாக இயற்கையிலேயே அழகாக இருக்கிறாள். இவளது படங்களைப் பார்ப்பவர்கள் உயிருள்ள குழந்தை என்றே நினைப்பதில்லை. அழகான பொம்மை என்கிறார்கள் அவளைச் சிரிக்க வைக்க பெருமுயற்சி செய்தேன். ஆனால் அவற்றை விட அவள் இயல்பாக இருந்த படங்களே தேவதையாகக் காட்டின. இவளது கண்ணில் ஜீவன் இருக்கிறது" என்று சிலாகிக்கிறார் ஒளிப்படக் கலைஞர் மோஃப் பாமுயிவா.

**உள்ளம் கொள்ளை கொண்ட நைஜீரிய தேவதை!**

# நடமாடும் நகைக்கடை

*13 கிலோ தங்க நகைகளை* அணிந்து தன் மீது பலரின் பார்வையையும் ஈர்க்கிறார் ஒரு வியட்நாமியர். ட்ரான் கோக் பஹ் என்பது அவரின் பெயர். 36 வயதான இவர் அந்நாட்டின் முக்கிய வியாபாரப் புள்ளி.


கழுத்தில் பெரும் சங்கிலி அதில் தொங்குகிறது. அதில் பெரிய பென்ரன் தொங்குகிறது. இதன் நிறை மட்டும் 5 கிலோ. இரு கைகளிலும் காப்புகள் தொங்குகின்றன. போதாக்குறைக்கு விரல்களில் பெரிய மோதிரங்களும் ஜொலிக்கின்றன. ஒவ்வொரு மோதிரங்களும் 500 கிராம் நிறை கொண்டவை.




பஹ்கின் உடலை அலங்கரிக்கும் ஒட்டுமொத்த நகைகளின் பெறுமதி நம் நாட்டுப் பணத்தில் 10 கோடி ரூபா பெறுமதி வாய்ந்தவை. தனது பாதுகாப்புக்காக 5 மெய்ப்பாதுகாவலர்கள் வலம் வருகின்றனராம்.

**தங்கம் என்பதால் பாரம் தெரியவில்லையோ...!**

# உலகின் விலையுயர்ந்த மீன்




Sakai Fish Farm Auction 4th October 2018

*32.6 கோடி* ரூபாவுக்கு விற்பனையாகியுள்ளது ஒரு மீன். சந்தேகம் வேண்டாம் உண்மைதான். உலகிலேயே அதிகூடிய விலைக்குப் போன மீன் என்ற சாதனையையும் இந்த மீன்.

சிவப்பும் வெள்ளையும் கலந்த கோய் கார்ப் இனத்தைச் சேர்ந்த இந்த மீனுக்கு எஸ் லெஜன்ட் எனப் பெயர். 101 செ.மீ. நீளமுடைய இந்த மீனை இந்த விலைக்கு வாங்கியவர் யார் என்பது தெரியவில்லை.

இந்த மீனால் 5 இலட்சம் முட்டைகள்வரை உற்பத்தி செய்யமுடியும். இதில் சுமார் 5 ஆயிரம் மீன்களே விற்கத் தகுதி உடையதாக இருக்கும். ஆனால் இந்த மீனின் விலை நம்பமுடியாதாக இருக்கிறது. உண்மையில் இந்த மீன்களின் சிறந்த விலை 9 கோடி ரூபாவாகவே இருக்க முடியும் என்கிறார் கோய் நிபுணர் டிம்.

**உண்மையில் இது பைத்தியக்கார உலகம்**



# ஐயோ... பாம்பு...!

பாம்பின் உடலை ஒத்த ஸ்ரொக்கிங்ஸை புதிதாக அறிமுகமப்படுத்தியுள்ளது ஜப்பானிய ஃபஷன் நிறுவனமான ஸ்ரூடியோ மிமி. இதனை அந்நிறுவனம் தனது சமூக வலைத்தளத்திலேயே அறிமுகப்படுத்தியது.

பாம்பின் தோலை பிறிண்ட் செய்தது போன்ற ஸ்ரொக்கிங்ஸின் பாதத்தின் முன் பகுதியும் பாம்பின் தலை போன்றே இருக்கும். அதுமட்டுமல்ல பாம்பின் வயிறு பளபளப்பது போன்று இந்த லெக்கிங்ஸின் பின்புறமும் பளபளக்கும்.

சமூகவலைதளத்தில் வைரலாகியுள்ள இந்த ஃபஷன் உடைக்கு ஓடர்களும் குவிந்து வருகிறதாம்...!

**பாம்புக் கன்னிகளின் உலா ஆரம்பம்...!**

# பருவநிலை மாற்றம்: பணக்கார நாடுகள் பாராமுகம் பரிதவிக்கும் சாதாரண நாடுகள்



தொழிற்புரட்சிக்கு முன்பு வரைக்கும் இயற்கையால் மட்டுமே அலங்கரிக்கப்பட்ட உலகமிது. அதன்பின் இந்தப் பூமியில் நடந்த மாற்றங்கள் உலகத்தின் 2.0 வேர்ஷன் எனலாம். அறிவியல், புதிய கோட்பாடுகள், அரசியல் வரைமுறைகள் அனைத்தும் இந்தக் காலத்திலிருந்து நவீனமடைகின்றன நிறைய மாற்றங்கள் காண்கின்றன. அதுவரைக்கும் இயற்கையையும், அதன் வளத்தையும் மட்டுமே சார்ந்திருந்த நாடுகள்தாம் பணக்கார நாடுகள். ஆனால், இந்தக் கருத்தோட்டத்தை முற்றிலுமாக மாற்றியது தொழிற்புரட்சி. ஒருவகையில் இது வளர்ச்சிதான் என்றாலும், அதன் பாதிப்புகளின் அளவும் மிகப்பெரிதாக மாறியது. விளைவு, அதுவரைக்கும் சீராக இயங்கிக் கொண்டிருந்த இயற்கை, அதன் சமச்சீரற்ற தன்மையை நோக்கி நகரத்தொடங்கியது. அதன் விளைவுதான் இன்றைய உலகம் எதிர்கொண்டு நிற்கும் பருவநிலைமாற்றம்.

**சர்வம் வெப்பமயம்:**

பூமியின் பரப்பில் வெப்பநிலை குறிப்பிட்ட சராசரி அளவுக்கு மேல் உயர்ந்தால் உலக வெப்பமயமாதல் ஏற்படும். தொழிற்புரட்சிக்கு முன்புவரைக்கும் சூரிய ஒளி அதிகரித்தல் அல்லது குறைதல், பூமி தனது நீள் வட்டப்பாதையிலிருந்து நுண்ணிய அளவில் விலகுதல், திடீர் பேரிடர்கள் போன்ற காரணங்களால் மட்டுமே பருவநிலை மாற்றம் ஏற்பட்டது. ஆனால், அதன்பின்பு இந்தக் காரணிகள் மொத்தமும் மாறிவிட்டன.

அதிகரிக்கும் பசுமைக்குடில் வாயுக்களின் (கார்பனீரொக்சைட், குளோரோ புளோரோ காபன் போன்றவை) வெளியேற்றம், பெற்றோல், டீசல் போன்ற எரிபொருள்களின் அதீத பயன்பாடு, அதிகரித்து வரும் மக்கள்தொகை, முக்கியமாக அழிக்கப்படும் இயற்கை வளங்கள் போன்ற மனிதனின் தொடர் செயல்களால் உலகப் பரப்பின் வெப்பநிலை அதிகரித்துக் கொண்டே சென்றது - செல்கிறது. கடந்த நூற்றாண்டில் 0.6 லிருந்து 0.9 டிகிரி செல்சியஸாக இருந்த பூமிப்பரப்பின் வெப்பநிலை இந்த நூற்றாண்டில் இரட்டிப்பாக அதிகரித்துள்ளது.

**பாரிஸ் அழைக்கிறது!**

தொழிற்புரட்சியைத் தொடர்ந்து காலனியாதிக்கம்,. உலகப்போர்கள், புரட்சிப் போராட்டங்கள் என்று ஒவ்வொரு நாடும் பிஸியாக இருந்ததால் சுற்றுச்சூழலை பற்றித் தாமதமாகவே உணர்ந்தனர். அதன்பின்னர்தான் ஐ.நா.,வில் சுற்றுச்சூழலை காப்பதற்காகத் தனி அமைப்பு நிறுவப்பட்டது. மேலும் 1992 ஆம் ஆண்டு தொடங்கிய United Nations Framework Convention on Climate Change (UNFCCC) என்ற அமைப்பு உலகளவில் கவனம் பெற்றது. அதைத்தொடர்ந்து குறிப்பிட்ட கால இடைவெளிகளில், பல நிகழ்வுகள் சுற்றுச்சூழல் சார்ந்து நிகழ்ந்து வந்தாலும் 2015 ஆம் ஆண்டு நடைபெற்ற 'பரிஸ் பருவநிலை மாற்ற ஒப்பந்தம்' தீர்க்கமான முடிவுகளை வலியுறுத்தித் தீர்வைப் பெற்றது.

இதன்படி, தொழிற்புரட்சி காலத்தில் இருந்ததிலிருந்து 2 பாகையால் பூமியின் வெப்பத்தைக் குறைக்க வேண்டும். இதற்காக ஒவ்வொரு நாடும் பசுமைக்குடில் வாயு வெளியேற்றத்தை 2020 ஆம் ஆண்டுக்குள் நிறுத்திக்கொள்ள வேண்டும் என்றும், இதனால் ஏற்படும் இழப்புகளைச் சரிசெய்ய வளர்ந்த நாடுகள் வளர்ந்து வரும் நாடுகளுக்கும் ஏழை நாடுகளுக்கும் உதவ வேண்டும் என்றும் கூறப்பட்டது. பெற்றோல் பயன்பாட்டை விரைவில் குறைத்துக்கொண்டு பசுமை எரிவாயுக்களை பயன்படுத்தப் போவதாக ஐரோப்பிய நாடுகளும் நம்பிக்கையளித்தன.

**பொறுப்புத்துறந்த அமெரிக்கா!**

அமெரிக்கா, ஐரோப்பிய நாடுகள் தொழிற்புரட்சியிலிருந்து வெளியேற்றிய பசுமை குடில் வாயுக்களுக்கு வரலாற்று ரீதியில் பொறுப்பேற்க வேண்டும் (Historical Responsibility) என்று 'கியோட்டோ பருவநிலை மாற்ற ஒப்பந்தம்' (1997) குறிப்பிட்டது. பாரிஸ் ஒப்பந்தத்திலும் தன் தொடர் அலட்சியங்களுக்குப் பிறகே ஒரு வழியாக இணைந்தது அமெரிக்கா.

ஒப்பந்தத்துக்கான முன்னெடுப்புகளை அமெரிக்கா மேற்கொள்ளும் என்று அப்போதைய ஜனாதிபதி ஒபாமா உறுதியளித்தார். ஆனால், கடந்த ஆண்டு ஜனாதிபதி ட்ரம்ப் தலைமையிலான 'புதிய அமெரிக்கா', ஒப்பந்தத்திலிருந்து விலகியது. அமெரிக்காவின் திறன்களும் வேலைவாய்ப்பும் குறையும், பொருளாதார பாதிப்புகள் ஏற்படும். மேலும் வளர்ந்த நாடுகளைக் குற்றம் சாட்டி, இந்தியா போன்ற வளரும் நாடுகளுக்கே ஒப்பந்தம் சாதகமாக உள்ளது என்று விலகலுக்கான காரணத்தைக் கூறினார் ட்ரம்ப்.

இதையடுத்து 'அமெரிக்காவுக்கே பொறுப்பில்லை, நாங்க மட்டும் பண்ணணுமா' என்று பல நாடுகள் ஒப்பந்தத்தை அலட்சியப்படுத்தின. இது நாடுகளின் தன்னார்வ அற்பத்தனத்தையே வெளிப்படுத்துகிறது என்று சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் கண்டனம் தெரிவித்தனர். இதைத் தொடர்ந்து பல பேச்சுவார்த்தைகளை புறக்கணித்து, தொடர்ந்து ஒப்பந்தத்தை எதிர்த்து வந்தது அமெரிக்கா.

நிலைமை இப்படியிருக்கையில் சில நாடுகள் மட்டும் ஒப்பந்தத்தை நிறைவேற்றுவதற்காக தொடர்ந்து இயங்கி வருகின்றன. இந்நிலையில், 2020இற்குள் அனைத்து நாடுகளையும் பரீஸ் உடன்படிக்கைக்காக ஒருங்கிணைத்துச் செயற்படுத்த சமீபத்தில் 'COP24 - Katowice' சந்திப்பு போலந்தில் நடைபெற்றது. மொத்தம் 196 நாடுகளின் பிரதிநிதிகள் இதில் கலந்துகொண்டு பரீஸ் உடன்படிக்கைக்காக வழிமுறைகளையும், அதில் இருக்கும் சிக்கல்கள் குறித்தும் விவாதித்தனர். தொழில்நுட்ப ரீதியாக எப்படிப் பருவநிலை மாற்றத்தைக் கட்டுப்படுத்துவது என இதில் பேசப்பட்டது. இறுதியில் அனைத்து நாடுகளும் பரீஸ் உடன்படிக்கைக்கான ஒருங்கிணைந்த செயற்றிட்டத்துக்கு ஒப்புதல் அளித்துள்ளன. 'இது மிகப்பெரிய பொறுப்பு" என்கிறார் கூட்டத்தை முன்னின்று நடத்திய மைக்கல் குர்ட்டைக்கா.

இந்த வார்த்தைகள் நம்பிக்கையளிப்பதாக இருந்தாலும், உலகின் பணக்கார நாடுகளின் செயல்பாடுகள் இதில் திருப்தியளிக்கும்படி இல்லை எனக் குற்றம் சாட்டுகின்றனர் சுற்றுச்சூழல் ஆர்வலர்கள். அந்த வகையில் இந்தச் சந்திப்பு கிட்டத்தட்டத் தோல்வியடைந்துவிட்டது என்பது அவர்கள் வாதம். ஒருவேளை காலநிலை மாற்றத்தின் பாதிப்புகள் அதிகமாகி புயல்,வறட்சி மற்றும் கடல்மட்டம் உயருதல் போன்ற பேரிடர்கள் தொடர்ந்து ஏற்பட்டால், சில ஆண்டுகளில் மனித குலம் மிகப்பெரிய விளைவைச் சந்திக்க வேண்டும் இதிலிருந்து உலகைக் காக்கவேண்டியதுதான் தங்களை பெரியண்ணன்களாக நினைத்துக்கொள்ளும் பணக்கார நாடுகளின் பணியே தவிர, யாருக்கோ ஏதோ பிரச்சினை என நினைத்து ஒதுங்குவதும், பாராமுகம் காட்டுவதும் அல்ல இயற்கைக்கு, இந்த நாடு வித்தியாசங்கள் தெரியாது!



# வலி.வடக்கு மக்கள் மீள்குடியேற்றம் வீட்டுத் திட்டமே பிரதான பிரச்சினை

## தவிசாளர் சுகிர்தன் நேர்காணல்

தமிழர் தாயகத்தின் வடக்கு மாகாணத்திற்கென உருவாக்கப்பட்ட வட மாகாண சபை எவ்வித அதிகாரங்களுமற்ற நிலையில் தமது ஆட்சிக் காலத்தை நிறைவு செய்துள்ளது. போர் காரணமாக இடம்பெயர்ந்து கடந்த 30 வருடங்களுக்கும் மேலாக தமது சொந்த இடங்களுக்குத் திரும்ப முடியாது தற்போதும் உறவினர்கள், நண்பர்கள் வீடுகள் உட்பட நாட்டுக்கு வெளியிலும் வசித்து வருகின்றனர். இராணுத்தினால் சுவீகரிக்கப்பட்டு கடந்த 30 வருடங்களுக்கும் மேலாக அவர்களது பயன்பாட்டில் காணப்பட்ட தமிழ் மக்களது பெறுமதி வாய்ந்த காணிகள் தற்போது தரிசாகியுள்ள நிலையில் கட்டம் கட்டமாக விடுவிக்கப்பட்டு வருகின்றன.

இதனடிப்படையில் யாழ்ப்பாணத்தின் வலிகாமம் வடக்கு பிரதேச சபைக்கு உட்பட்ட தெல்லிப்பழை பிரதே செயலகத்துக்கு உட்பட பகுதியில் உள்ள மக்களது காணிகள் கட்டம் கட்டமாக விடுவிக்கப்பட்டு வருகின்ற போதிலும் இன்னும் 3,400 ஏக்கர் காணி விடுவிக்கப்பட வேண்டியுள்ளதாக வலி.வடக்கு பிரதேச சபை தலைவர் சந்திரலிங்கம் சுகிர்தன் கூர்மை செய்தித் தளத்திற்கு வழங்கிய விசேட நேர்காணல் பிரசுரமாகிறது.

**வலி. வடக்கு பிரதேச சபை தற்போது புதிதாக உருவாக்கப்பட்டுள்ளது. இவ்வாறு உருவாக்கப்பட்ட சபையில் சட்டவாட்சி எவ்வாறு காணப்படுகின்றது?**

எங்களைப் பொறுத்தவரை வடக்கு மாகாண சபை முதலில் நியதிச் சட்டங்களை உருவாக்கி அதனை வர்த்தமானியில் வெளியிட வேண்டும். அதன் பின்னர் எங்களது சில திருத்தங்களையும் உள்ளடக்கி நாங்கள் மீண்டும் அதனை வெளியிட வேண்டும். ஏற்கனவே மாகாண சபையால் வெளியிடப்பட்ட நியதிச்சட்டங்கள் இந்தப் பிரதேச சபை உருவாக்கப்பட முன்னரே வெளியிடப்பட்டுள்ளன. அதனையே நாங்கள் தற்போது பின்பற்றி வருகின்றோம்.

**புதிதாக மக்கள் மீளக்குடியேற்றப்பட்டுள்ள இந்தப் பகுதியில் தீயணைப்பு சேவை காணப்படுகின்றதா?**

தீயணைப்பு சேவை என்பது யாழ்ப்பாணம் நகர சபையில் மாத்திரமே இருக்கின்றது. தற்போது அதனை மாநகர சபைக்கும் கொண்டு வருவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. பிரதானமாக மாகாண அரசாங்கம் எதிர்கொள்ளும் பிரச்சினை ஆளணிப் பற்றாக்குறை. 2015 ஆம் ஆண்டிலிருந்து பல நியமனங்கள் மேற்கொள்ளப்படவில்லை. உள்ளக பதவி உயர்வு அதாவது மேற்பார்வையாளர் போன்ற பதவிகளுக்காக நியமனங்கள் மேற்கொள்ளப்படவில்லை. அவற்றை சீர்செய்த பின்னர் இதுபோன்ற வசதிகள் எங்களுக்கு கிடைக்கும் என நம்புகின்றோம்.

**கடந்த 30 வருடங்களாக இலங்கை இராணுவத்தின் கட்டுப்பாட்டிலிருந்து விடுவிக்கப்பட்டுள்ள இந்த வீதிகள் மீண்டும் அபிவிருத்தி செய்யப்பட்டதா?**

தெல்லிப்பழை பிதேச சபைக்கு உட்பட்ட பிரதேசங்கள் கட்டம் கட்டமாக மீள்குடியேற்றம் மேற்கொள்ளப்பட்ட பகுதிகள். ஏனைய பிரதேச சபை போன்றதல்ல இது. நாளாந்தம் விடுவிக்கப்படும் காணிகளின் எண்ணிக்கை அதிகரித்துச் செல்லும்போது வீதி அபிவிருத்தியை மேற்கொள்ள வேண்டிய தேவை தொடர்ந்தும் காணப்படுகின்றது. எனினும் விடுவிக்கப்பட்ட பகுதிகளில் 80 வீதமான வீதிகள் செப்பனிடப்பட்டுள்ளன.

> “2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளில் முறையே 5000 மில்லியன் மற்றும் 3000 மில்லியன் ரூபா நிதியுதவி கிடைத்தது. எனினும் 2018 ஆம் ஆண்டு 300 மில்லியன் ரூபா மாத்திரமே கிடைத்தது. இதில் மிக குறைந்த தொகையான 30 மில்லியனே பயன்படுத்தப்பட்டது. மிகுதி வாழ்வாதாரம் உட்பட பல தேவைகளுக்கும் பயன்படுத்தப்பட்டது. 2018 ஆம் ஆண்டைப் பொறுத்தவரை இதனை ஒரு துரதிர்ஷ்டவசமான ஆண்டு.”



**இந்தப்பகுதியில் காணிகள் கட்டம் கட்டமாக விடுவிக்கப்படுவதாக சொல்கின்றீர்கள். அவ்வாறாயின் இதுவரை விடுவிக்கப்பட்ட காணிகள் விடுவிக்கப்பட வேண்டியுள்ள காணிகள் எவ்வளவு?**

தெல்லிப்பழை பிரதேச சபைக்கு உட்பட்ட பகுதியில் மூவாயிரத்து நானூறு (3400) ஏக்கர் காணிகள் விடுவிக்கப்பட வேண்டியுள்ளன. வலிகாமம் வடக்கு பிரதே செயலக எல்லைக்கு உட்பட்ட பகுதிகளில் அரச காணிகளின் எண்ணிக்கை குறைவு. இங்கு பொதுமக்களுக்குச் சொந்தமான காணிகளே அதிகம். இதில் விமான நிலையம் அமைப்பதற்காக 325 ஏக்கர் காணி அரசாங்கத்தினால் உள்வாங்கப்பட்டுள்ளது.

இதற்காக மீண்டும் 650 ஏக்கர் காணியை சுவீகரிக்கவுள்ளதாக அரச வர்த்தமானி வெளியிடப்பட்டிருந்தது. எனினும் அதற்குள் பொதுமக்களுக்குச் சொந்தமான காணிகள் காணப்படுவதனால் அந்த நடவடிக்கை முழுமையாக மேற்கொள்ளப்படவில்லை. அதற்கான வேலைத்திட்டங்கள் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**மக்கள் மீள்குடியேற்றப்பட்டதன் பின்னர் அவர்களுக்கு உதவித் திட்டங்கள் வழங்கப்பட்டனவா?**

பிரதேச செயலகத்தின் ஊடாகவே உதவித் திட்டங்கள் மேற்கொள்ளப்படுகின்றன. இதற்குள் அரச மற்றும் அரசசார்பற்றநிதியைப் பயன்படுத்தி அபிவிருத்தித் திட்டங்கள் மேற்கொள்ளப்படுகின்றன. இதில் வாழ்வாதாரம் தொடர்பில் அதிகளவு வேலைத்திட்டங்கள் மேற்கொள்ளப்படுகின்றன. கடற்றொழிலாளர்களுக்கு வலைகள் படகுகள் வழங்குதல். விவசாயிகளுக்கு விவசாய உபகரணங்கள் விவசாய உள்ளீடுகள் வழங்குதல் போன்றன நடைபெறுகின்றன.

**கடந்த 30 வருடங்களாக தற்காலிக இடங்களில் தங்கியிருந்த பின்னர் மக்கள் தமது சொந்த இடங்களுக்கு திரும்பியிருக்கின்றார்கள். இவ்வாறு குடியேறியவர்களுக்கான வீடுகள் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளனவா?**

வீட்டுத்திட்டம் என்பது தெல்லிப்பழை பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட பகுதியில் மிகப் பிரதானமான பிரச்சனையாக காணப்படுகின்றது. இந்தப் பிரதே சபைக்கு உட்பட்ட பகுதிகள் கட்டம் கட்டமாகவே இராணுவத்திடமிருந்து விடுவிக்கப்படுகின்றன. அதனால் மக்கள் கட்டம் கட்டமாகவே தமது சொந்தக் காணிகளில் மீள்குடியேறுகின்றனர். கடந்த 2017 ஆம் ஆண்டு வரை மீள்குடியேறிய மக்களுக்கு உரிய முறையில் வீட்டுத்திட்டங்கள் வழங்கப்பட்டு வந்தன.

2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளில் முறையே 5000 மில்லியன் மற்றும் 3000 மில்லியன் ரூபா நிதியுதவி கிடைத்தது. எனினும் 2018 ஆம் ஆண்டு 300 மில்லியன் ரூபா மாத்திரமே கிடைத்தது. இதில் மிக குறைந்த தொகையான 30 மில்லியனே பயன்படுத்தப்பட்டது. மிகுதி வாழ்வாதாரம் உட்பட பல தேவைகளுக்கும் பயன்படுத்தப்பட்டது. 2018 ஆம் ஆண்டைப் பொறுத்தவரை இதனை ஒரு துரதிர்ஷ்டவசமான ஆண்டாகவே கருதவேண்டியுள்ளது. ஏனெனில் இந்த ஆண்டு ஒரு வீட்டுத்திட்டம் கூட மக்களுக்கு வழங்கப்படவில்லை.

சுமார் 800 ஏக்கர் காணி விடுவிக்கப்பட்ட போதும் வீட்டுத்திட்டம் எதுவும் வழங்கப்படாததனால் மக்கள் தமது காணிகளுக்குள் மலசலகூடத்தை மாத்திரம் அமைத்துவிட்டு தற்காலிக கொட்டில்களை அமைத்து அதில் தற்காலிகமாக குடியேறி வசிக்கின்றனர். வீதி அபிவிருத்தி என்பது வெவ்வேறு நிதிப்பங்களிப்புடன் மேற்கொள்ளப்பட்டாலும் கூட கடற்றொழில் மற்றும் விசாயத்தை பிரதான தொழிலாகக் கொண்ட மக்கள் தங்க இடமின்றி சிரமப்படுகின்றனர்.

(18ஆம் பக்கம் பார்க்க)

## வலி.வடக்கு...

(18ஆம் பக்கத் தொடர்ச்சி)

இராணுவம் வசமிருந்து விடுவிக்கப்பட்ட மயிலிட்டி கலைமகள் வித்தியாலயம் 2019 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட வேண்டும். எனினும் அதற்கான எந்தவொரு அடிப்படை வசதிகளும் இதுவரை ஏற்படுத்திக் கொடுக்கப்படவில்லை.

**மீளக்குடியேறியுள்ள மக்களது வாழ்வாதார நிலை தற்போது எவ்வாறு காணப்படுகின்றது?**

வாழ்வாதாரத்துக்கான அடிப்படைத் தேவைகள் பிரதேச சபையால் வழங்கப்பட்டு வருகின்றன. கடற்தொழிலாளர்களுக்கு அதற்கான உபகரணங்களான வலைகள் படகுகள் வழங்குதல். விவசாயிகளுக்கு விவசாய உபகரணங்கள் விவசாய உள்ளீடுகள் வழங்குதல் போன்றன நடைபெறுகின்றன. அத்துடன் அவற்றை சந்தைப்படுத்துவதற்கான வசதிகளும் இங்கு காணப்படுகின்றன.

கடந்த காலத்தில் வலிகாமத்துக்கும் வடமராட்சிக்கும் இடையிலான பிரதான கடற்போக்குவரத்து பாதை மூடப்பட்டிருந்தது. தற்போது அந்தப் பாதை திறக்கப்பட்டு இரவு 9 மணி வரை அதன் ஊடாக போக்குவரத்தை மேற்கொள்வதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இதனால் சந்தைப்படுத்தல் தற்போது இலகுபடுத்தப்பட் டுள்ளது. 2018 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்திற்கு பின்னர் அதிகளவான காணிகள் விடுவிக்கப்பட்டுள்ளன. வீட்டுத் திட்டமே இங்கு பிரதான பிரச்சினையாக உள்ளது.

தெல்லிப்பழை பிரதேச சபைக்கு உட்பட்ட பகுதிகளை எடுத்துக்கொண்டால் இங்குள்ளவர்கள் இரு தொழில்களை செய்பவர்களாக உள்ளனர். அதாவது அரச உத்தியோகம் மேற்கொள்பவர்கள் விவசாயத்தையும் பகுதி நேரத் தொழிலாக செய்கின்றனர். இதனால் விவசாயம் செய்யும் அரச உத்தியோகத்தர்களுக்கு உரிய வசதிகள் வழங்கப்படுவதில்லை. இதனால் அவர்கள் அதிகம் பாதிக்கப்படுகின்றனர். தமிழ் மக்களினுடைய அடிப்படைப் பொருளாதாரத்தில் விவசாயம் ஒன்றாக காணப்படுவதனால் அரச உத்தியோகத்தர் என்ற தடை நீக்கப்பட வேண்டும். ●

## தீர்வு....

(14ஆம் பக்கம் பார்க்க)

அவளவைக்கு இல்லாத கவலை உமக்கு வந்திட்டுதோ...?"

பூரணத்துக்கு அது சுள்ளென்று சுட்டிருக்க வேண்டும். 'என்னவோ செய்யுங்கோ. எல்லாம் என்ரை விதி. கிடந்து உலையுறன்" என்றவாறு பேணியை எடுத்துக் கொண்டு நகர்ந்தாள்.

'ஏதோ கோடீஸ்வரன் வீட்டிலை இருந்து வந்த குமரி மாதிரி எல்லே நிக்கிறா" என எண்ணி மெல்லச் சிரித்துக் கொண்டார். பூரணம் எதிலாவது திருப்திப்படுபவள் இல்லை என்பது அவருக்குத் தெரியும்.

கைகளை உயர்த்திச் சோம்பல் முறித்தார். அன்றைய பத்திரி கையை எடுத்துப் புரட்டினார். சாப்பாடு தண்ணீர் இல்லாவிட்டா லும் நாட்டு நடப்புகளை அறிந்து கொள்ளாவிட்டால் அவருக்குத் தூக்கம் வராது.

தலைப்புச் செய்தியை மேய்ந்தார்.

'அனைத்துத் தரப்பினரும் ஏற்றுக் கொள்ளக்கூடிய தீர்வொன்றைக் காண்பதே எமது அரசாங்கத்தின் முக்கிய நோக்கம்."

'மூன்று கிபீர் விமானங்கள் கொள்வனவு"

'உவங்களைத் திருத்தேலாது. நான் என்ரை பிரச்சினைக்கே தீர்வு காணேலாமல் முழுசிறன்" வாய்விட்டுத் திட்டிக் கொண்டார்.

கைகள் ஐந்தாம் பக்கத்தைப் புரட்டின.

காடழிப்பதால் ஏற்படும் தீமை பற்றி 'மில்க்வைற்" தகவலாக ஒரு கட்டுரை பிரசுரமாகியிருந்தது.

நிமிர்ந்து உட்கார்ந்தார்.

'மரங்களைத் தொடர்ச்சியாக அழிப்பதால் இயற்கையான காலநிலை வட்டம் பாதிப்படையும் நீர்ச்சமநிலை குலையும் மழை குறைந்து கடும் வறட்சி ஏற்படும். எனவே அளவுக்கு மீறி மரங்களை அழிக்காது நலமாக வாழ ஆளுக்கொரு மரம் நடுவோம். எமது தேசம் செழிப்படையக் கண்டு மகிழ்வோம்" - என்று அந்தக் கட்டுரை முடிந்திருந்தது.

பத்திரிகையை மேசையில் வைத்துவிட்டுச் சிந்தனையில் ஆழ்ந்தார். இரண்டு வருடங்களுக்கு முன்னர் வீதியோரங்கள், வெளிகள் எல்லாம் மரங்கள் நடப்பட்டு மிகவும் ஒழுங்காக நீருற்றப்பட்டுப் பராமரிக்கப்பட்ட காட்சிகள் மனதில் நிழலாடின.

'ஓ... எவ்வளவு இழந்திட்டம்" நெடுநேரம் அப்படியே அமர்ந்திருந்தார்.

'இந்த மனிசன் சாப்பிடாமல் என்ன கண்டறியாத யோசினையோ?" உள்ளே பூரணம் புறுபுறுப்பது கேட்டது.

ஏதோ தீர்மானித்தவராக எழுந்து கிணற்றடிக்கு முகங்கழுவப் போனார்.

● ● ●

இலேசாகச் சில்லிட்டபடி வீசிய காற்று செல்லத்துரையரை நிஜ உலகுக்குக் கொண்டு வந்தது. சிந்தித்தபடி வாளியும் கையுமாக நின்றுவிட்டதை உணர்ந்தவர். நிமிர்ந்து மேலே பார்த்தார். வெகு தொலைவில் வடகீழ் வானம் மெல்லியதாகக் கறுத்திருப்பது தெரிந்தது.

இனி...

மழை பெய்யக்கூடும்!

## தவிக்கும்....

(07ஆம் பக்கத் தொடர்ச்சி)

அதற்குரிய திராணி வந்துவிடும். இதற்கு மட்டுமல்ல சமூகப் பொறுப்பைச் சரிவர உணர்ந்தாலே பல விடயங்கள் நடைபெறும். சமூகச் சீரழிவுகளை ஏற்படுத்த க் கூடிய பல விடயங்களை அடையாளங் காண்போம். அவற்றை எதிர்த்து நிற்போம்.

அனர்த்தத்தில் உதவிகளைக் கொடுத்து உதவிய உறவுகளுக்கு ஒரு வேண்டுகோள் என்ன வெனில் இது போன்ற தருணங்களிலிருந்து மீண்டெழும் மக்களுக்கு அப்போது தேவைப்படுகின்ற முதல் உதவிகள் மிகவும் முக்கியமானவை. அதைவிட மிகவும் முக்கியமானவை என்ன வெனில் நிலைமைகள் இயல்புக்குத் திரும்பியதும் அவர்களுக்குத் தேவையான வாழ்வாதாரங்களை முன்னெடுக்க வேண்டிய தேவைகளை நிவர்த்தி செய்வது. இவை இரண்டும் சரிவர ஒருங்கமைக்கப்பட்டால்தான் அவர்களால் இயல்புடன் நகரமுடியும்.

இயல்புச் சமநிலையற்ற நிலைமைகளால் இன்னல்கள் பல இனியும் வரலாம். நாம்தான் விழிப்புடன் இருந்து செயலாற்ற வேண்டும். இது போன்ற அனர்த்த முகாமைத்துவத்தை அரசும், அரசு சார்ந்த நிறுவனங்களும்தான் கட்டைக்க வேண்டும் என்றோ முன்னெடுக்க வேண்டும் என்றோ எதிர்ப்பார்ப்பதைவிட்டு நாமே ஒரு சுயாதீனமான நிறுவனத்தை எமக்கென உருவாக்கலாம். கட்டமைக்கலாம். அதுவே எமக்கானதாக இருக்கும்.



## அ.ராமசாமி...

(21ஆம் பக்கத் தொடர்ச்சி)

அந்தப் புனைவெழுத்தை - கதையை - வாசகர்கள் நடந்திருக்கக் கூடிய கதையாக அல்லது நடக்கக் கூடிய கதையாக நம்பி வாசிப்பர். காலம், வெளி, பாத்திரங்கள் என்ற மூன்றில் ஏதாவது ஒன்று தொடர்பு பட்டதாக இருந்தால் போதும். நம்பகத்தன்மை உண்டாகி விடும்.

பிரபஞ்சனின் கதைகள் உண்டாக்கும் நம்பகத்தன்மை என்பது அவர் வெளிகளை - இடங்களைச் சித்திரிக்கும் எழுத்துமுறையில் இருக்கிறது என்பது எனது கணிப்பு. குறிப்பான இடங்களில் கதை நிகழ்வதாக எழுதுவதன் மூலம் அக்கதையின் காலத்தையும், இடம்பெற்றுள்ள பாத்திரங்களையும் நம்பத் தக்கவர்களாக மாற்றி விடுவார். வட்டாரம் சார்ந்த கதைகள் என்ற வகைப்பாடுகளின் பின்னணியில் அந்தந்தப் பிரதேசத்தின் வட்டாரமொழிப் பிரயோகம் இருக்கிறது என்றாலும், இடங்களைச் சித்திரித்துக் காட்டும் படைப்பாளியின் திறமையினால் தான் நம்பகத்தன்மை கூடுகிறது.

மனிதாபிமான வெளிப்பாடு நவீனத்துவக் கதைகளின் முதன்மையான கூறாகக் கருதப்பட்ட காலத்தின் பிரதிகளாக அவரது சிறுகதைகள் ஒவ்வொன்றும் வெளிப்பட்டன. சிறுகதைகள் அளவிற்கு நாவல்களில் முழுமையை உருவாக்கவில்லையென்றாலும் புதுச்சேரி வரலாற்றை உள்வாங்கிக் கொண்டு எழுதிய வரலாற்றுப் புதினங்கள் தமிழ் வரலாற்றுப்புதினங்களில் திசை விலகல்களை ஏற்படுத்தியவை.

## பிரபஞ்சனின்...

(21ஆம் பக்கத் தொடர்ச்சி)

பிரபஞ்சனின் சிறந்த படைப் புகளான 'வானம் வசப்படும்', 'மானுடம் வெல்லும்', 'இன்பக்கேணி' போன்ற வரலாற்றுப் புதினங்களைப் படித்திருக்கிறேன். ஆனால், இந்தச் சிறுகதை ஒரு நெகிழ்வான அனுபவம் தந்தது.

## அழகியசிங்கர்....

(21ஆம் பக்கத் தொடர்ச்சி)

கௌரவப்படுத்த பணமுடிப்பு கொடுத்தார்கள். அந்த அரிய நிகழ்ச்சியில் நானும் கலந்துகொண்டு அவருடைய சிறுகதைகளின் மூன்று தொகுதிகளையும் விலைக்கு வாங்கினேன். முதலில் பிரபஞ்சன் ஒரு தேர்ந்த ரசிகர்.

அவர் படித்த புத்தகங்களைப் பற்றி, எழுத்தாளர்களைப் பற்றியெல்லாம் எழுதி இருக்கிறார். அவர் மரணமடைந்து விட்டார் என்ற செய்தியைக் கேட்டு வருந்துகிறேன். அவர் ஆன்மா சாந்தி அடைய இறைவனை வேண்டுகிறேன்.

# ஆரிட்டை சொல்லி அழ?

## இது நாட்டு நடப்பைப் பற்றிய ஒரு (வி)சித்திரத் தொடர்



## பாத்தினீயத்தைப் பரமசிவனண்ணைதான் பாத்து அழிக்க வேணுமோ?

கன நாளைக்குப் பிறகு இவை துவங்கினவை. முன்னம் வட மாகாண சபையிலை ஐங்கர நேசன் துவங்கிக் கைவிட்டப் பிறகு தாங்கள் பாத்தினீயத்தை ஒழிக்கப் போறம் எண்டு விவசாயத் தணைக்களம் வேட்டியை உயத்திக் கட்டிக் கொண்டு இறங்க அதுக்குப் பிற்பாட்டுப் பாடப்போறம் எண்டு டீ.எஸ் ஒபிஸ்காரரும், அவையளுக்குப் பின்னாலை அவையின்ரை எடுபிடியளும் இறங்கிச் சினம். ஆளுனர் பாத்தார் தானும் இந்த விசியத்திலை தலையிட்டுக் குளிர் காய்வம் எண்ணிட்டு ஒரு கூட்டத்தை ஜீ.ஏ வேதாநாயகனிட்டைச் சொல்லி ஒழுங்குபடுத்தி யாழ்ப்பாணக் கச்சேரியிலை நடந்தது. அது சம்பந்தப்பட்ட எல்லாரும் முகூர்த்தத்துக்கு வாற மாதிரி வந்து தடல்புடலா இறங்கினால் எல்லாரும் நினைச்சவை ஏதோ உடனடியா பார்த்தினீயத்தைப் பிடுங்கிப் பாடம் பண்ணிக் கொளுத்தப் போயினமெண்டு. வந்தவை றோலைத் திண்டு, ரீயைக் குடிச்சிட்டுப் போன 17ஆம் திகதி தொடக்கம் 24 வரை ஒரு கிழமைக்குப் பாத்தினீய வாரத்தை அழிப்பு வாரமாக் கொண்டாட வேணும் ஏண்டு அறிவிச்சிட்டுப் போனவைதான் இன்னும் பாத்தினீயம் றோட்டுக் கரையிலையும், தோட்ட வெளியளிலும் முந்தினதைவிட வலு கம்பீரமாக நிக்கிது.

அப்ப துவங்கின வீச்சுக்கு அதை வடிவாப் பேப்பருகளிலை அறிவிச்சு ஈன இரக்கமில்லாமல் ஆக்களைத் தண்டிச்சால் உது சின்ன விசியம். அவை அது தொடர்பா எடுத்த முடிவெல்லாம் சரிதான். ஆனால் உந்த அரச அதிகாரியளும், டிப்பாட்மென்ற் காரரும் வழமையா எடுக்கிறமாதிரித் தீர்மானங்களை எடுப்பினம் ஆனால் நடைமுறைப்படுத்த மாட்டினம். ஏனெண்டால் அவையளுக்கையும் அதிகாரச் சிக்கல் இருக்கு. ஒராளை ஒராள் வெட்ட நிப்பினம். மற்றவை செய்தால், மற்ற டிப்பாட்மென்ற செய்தால் தங்கடை மௌவுசு குறைஞ்சு போம் எண்டிட்டு தறிக்க மாட்டினம், வேரோடை வெட்டுவினம்.


உது துவங்கேக்கையே ஒராள் சொன்னவர் உது ஆண்டியள் கூடி மடம் கட்டின மாதிரித்தான் நடக்கும் எண்டு. அவர் சொன்னது சரியாப் போச்சுது. ஆண்டியள் கூடிக் கட்டின மடம் மாதிரியெண்டு சொல்லப் பிடாதாம். ஆண்டியல் விடியக் காலமை கண்ட கனவெண்டும் சொல்லலாம். ஏனெண்டால் ஆண்டியள் கூடி சிலநேரம் மண்ணாலை கட்டுற மண்டபம் கொஞ்ச நேரத்துக்காவது கிடக்கும். கனவு எண்டால் கண் திறக்க மறைஞ்சுபோம். அது நடக்கவும் மாட்டுது.

பாத்தினீயத்தை சனம்தான் நினைச்சு ஏதேனும் செய்தால் சரியே ஒழிய கவுண்மென்ற் ஆக்கள் ஒண்டும் செய்யாங்கள். டெங்கு எங்கை கிடக்கெண்டு பூதக் கண்ணாடி வைச்சுப் பாத்துக் கொண்டு திரியிற பீ.எச்ஐ மார் அதுக்குத் தெண்டம் அடிக்கிறமாதிரி உதுக்கும் ஏதேன் செய்து சனத்தை வெருட்டலாம் தானே? அவையும் அந்தக் காக்கிச் சட்டையளைப் போட்டுக் கொண்டு சூரன்மாதிரித் திரிவினமேயொழிய காரியம் ஒண்டையும் சரியாச் செய்யாயினம். பாரைப் படைச்ச பரமசிவன் தானாப் பாத்துத்தான் பாத்தினீயத்தை அழிக்க வேணுமோ? இந்தக் கேவலங்கெட்ட அதிகாரியளின்ரை அதிகுதியை நாங்கள் ஆரிட்டைச் சொல்லி அழ?

- கோளரங்கன்.

# இருட்டடிப்பு செய்திகள்

நான்கு சாலைகள் சந்திப்பினூடே
உள்ள மகாத்மா சிலையின்
சுற்றுப்புற இரும்புத்தடுப்பு
கண்ணீர் அஞ்சலி
பதாகைகளுக்கானதாகிவிட்டது.
தினமும் யாரோ ஒருவர்
அல்லது ஒன்றுக்கு மேற்பட்டவரின்
இறப்புச் செய்தியை
அந்த இடம் அறிவித்துக்கொண்டே உள்ளது.
வாகன ஓட்டிகளும்
பாதசாரிகளும்
அந்த இடத்தில் சற்றே நிதானப்பட்டு
இன்று யார் அல்லது யார் யார்
என்று அறிந்துகொண்டு
சிலர் அதிர்ந்தும்
சிலர் மகிழ்ந்தும்
சிலர் ஏமாந்தும் செல்கிறார்கள்.
காந்திசிலைக்கு ஏதேனும்
கட்சியினர் மாலையிட
வரும் நாட்களில் இறப்போர்களின்
மரணச் செய்திகளை மட்டும்
அந்த இடம்
இருட்டடிப்பு செய்துவிடுகிறது.



# எதிர்வீட்டுப் பூனையும் பேத்தியும்

எப்போது கதவைத் திறந்தாலும்
வீட்டுக்குள் வந்துவிடும்
எதிர்வீட்டுப் பூனைக்குட்டி
மொத்தமாய் சாம்பல் நிறம்
முகத்தில் வெள்ளைப் பொட்டு
தூக்கிக் கொஞ்ச வேண்டும் போலிருக்கும்
'எதுடா சாக்குன்னு'
சண்டைக்கு வருவாள் எதிர்வீட்டுப் பெண்.
அவளின் பேத்திக்கும் பூனைக்கும்
அந்த வீட்டின் மேலொரு கண்ணிருக்கும்.
அவளில்லாவொரு மாலை வேளையில்
பதுங்கிப் பதுங்கி இரண்டும் வந்தன
சிறுமி அகலக்கண் விரித்தாள்
அங்குமிங்கும் நோட்டமிட்டாள்.
மகனின் பொம்மைக்கூடையை
கொட்டிக்கிளறிப் பிரமித்தாள்.
குட்டிக்கும் ஒரே கும்மாளம்
சமையலறை, சாமியறை, புத்தக அலமாரியென
தாவிக் குதித்தது.
கதவிடுக்கில் பதுங்கிய பூனைக்கு
எஜமானி உருவம் புலப்படவே
மிரண்டுபோய்
தலைதெறிக்கவோடிய
இருவரிடமிருந்தும் கோரஸாய் வந்தது
"மியாவ்" சத்தம்.

- காசாவயல் கண்ணன்.

■ நா.யோகேந்திரநாதன்

# நீந்திக் கடந்த நெருப்பாறு 56

நன்றி:தமிழ்லீடர் - அவுஸ்ரேலியா

பரமசிவம் ஒரு பெரு மூச்சுடன் சொன்னார், "பாவம்... காசு தராட்டில் பரவாயில்லை... ஆனால் இவ்வளவு கஷ்டத்தை ஒரேயடியாய் மனுஷன் என்னண்டு தாங்கிறான்"

"கஷ்டம் இப்பவெல்லாம் எங்களைக் கேட்டுக்கொண்டே வருகுது. வந்தால் என்ன செய்யுறது. தாங்கத்தானே வேணும்", என்றார் முருகர்.

"முருகர் உனக்கு பெண்சாதி, பிள்ளை குட்டியின்ரை அருமை விளங்காது. இரண்டு பிள்ளையள், மருமேன் எண்டு அடுத்தடுத்து யமனட்டை குடுக்கிறது தாங்கத்தக்க விசயமே?" எனச் சற்றுக் கடுமையாகக் கேட்டார் பரமசிவம். அந்த வார்த்தைகள் முருகரைச் சற்று அதிர வைத்துவிட்டன. பரமசிவம், பிள்ளைகளில் எப்படியான பாசம் வைச்திருக்கிறார் என்பது முன்பே முருகருக்குத் தெரியும். ஆனால் துணிச்சலுடன் ஆபத்தான காரியங்களில் இறங்கும் சிவத்துக்கு ஏதாவது நடந்துவிட்டால் பரமசிவம் சற்றும்கூடத் தாங்கிக்கொள்ள மாட்டார் என்பதை அவரின் கோபம் முருகருக்கு உணர்த்தியது.

எனினும் அவர் கதையைத் திசை திருப்பும் விதமாக, "எனக்கே பிள்ளையள் இல்லை. இயக்கப் பெடியள் எல்லாம் என்ரை பிள் ளையள் தானே?" என்றார். அவர் அன்றுவரை தான் குஞ்சுக்குளம் காட்டுக்கு சிவத்தைக் கூட்டிச் சென்ற கதையைப் பரமசிவத்துக்கும் சொன்னதில்லை. இனியும் அதைச் சொல்லப் போவதுமில்லை. அப்போது அங்கு வந்த வேலுப்பிள்ளை, "என்ன பொது நோக்கு மண்டபப் பக்கம் போகேல்லையே?"

"ஏன்.. என்ன பிரச்சினை?", எனக் கேட்டார் முருகர்.

"அஞ்சலிக்கெண்டுபதினாறு பொம்பிளைப் பிள்ளையளின்ரை யும் ஆறு பொடியங்களின்ரையும் வித்துடல் கொண்டு வந்திருக்கிறாங்களாம்.

"யார் பெத்த பிள்ளையளோ?", என்றுவிட்டு இருந்த இடத்தைவிட்டு எழுந்தார் பரமசிவம்.

"வா.. வா.. போயிட்டு வருவம்", என்றுவிட்டு முன்னால் நடந்தார் முருகரப்பு. பதட்டத்துடன் அவரைத் தொடர்ந்தார் பரமசிவம்.

பரமசிவமும் முருகரும் பொதுநோக்கு மண்டபத்தை அடைந்தபோது மக்கள் வித்துடல்களுக்கு மலர் வணக்கம் செலுத்திக்கொண்டிருந்தனர். சுற்றி அமர்ந்திருந்த மக்களின் முகங்களில் எல்லையற்ற சோகம் படர்ந்திருந்த போதிலும் அங்கு ஒருவிதமான புனிதம் கலந்த அமைதி நிலவியது. பரமசிவம் முருகரின் பின்னால் வரிசையில் நின்று மெல்ல, மெல்ல ஒவ்வொரு அடியாய் முன்னால் நகர்ந்தார். அவர் மனம் என்றுமில்லாதவாறு பதைபதைத்துக் கொண்டிருந்தது. சிவம் போராளியாகக் களமாடத் தொடங்கி பல வருடங்கள் கடந்து விட்டன. அவர் எப்போதுமே



அவனுக்கு ஏதாவது ஆபத்து வந்து விடுமோ என்று அஞ்சியதில்லை.

அது மட்டுமன்றி, "அவன் காத்தானுக்கல்லே நடிக்கிறவன். அவன் மாரியம்மன்ரை பிள்ளை. அவனுக்கு முன்னாலை ஆரும் நிக்க ஏலுமே?" என அவர் பெருமையுடன் சொல்லிக்கொள்வதுண்டு. அவர் பாலம்பிட்டியிலிருந்து வெளியேறிய பின்பு அவருக்கு இப்படியான மனக் குழப்பமும் பயமும் அடிக்கடி ஏற்பட ஆரம்பித்திருந்தன. அவர் தனது காணியின் பின்பகுதியில் வேப்பமரத்தின் கீழ் ஒரு கொட்டில் போட்டு சூலம் நட்டு முத்துமாரியை வழிபட்டு வந்தார். என்ன இடைஞ்சல் வந்தாலும் அவர் ஒவ்வொரு திங்களும் விளக்கு வைத்து 'மாரியம்மன் காப்பு' பாடத் தவறுவதில்லை.

இப்படி இடப்பெயர்வு நீண்டு தொடரும் என அவர் எதிர்பார்த்திருந்தால், சூலத்தைக் கொண்டுவந்து ஏதோ ஒரு வேம்பின் கீழ் நட்டு வழிபட்டிருப்பார். ஒரு சில நாட்கள் பெரியமடுவில் தங்கிவிட்டு மீண்டும் பாலம்பிட்டிக்கு போய்விடலாம் என்ற அவரின் எதிர்பார்ப்பு வீண் போய்விட்டது. தான் அம்மனைக் கைவிட்டு வந்துவிட்டதால் அம்மனின் அருள் தன்னைவிட்டு விலகிவிட்டதாக எண்ணி மனதுக்குள் அவர் பயந்து கொண்டிருந்தார். அதன் காரணமாகவே இப்போதெல்லாம் சிவம் பற்றிய பயமும் அவருக்கு அடிக்கடி ஏற்பட ஆரம்பித்தது.

முருகர் மலர்களை கைகளில் எடுத்துக்கொண்டு முன் நகர பரமசிவமும் குனிந்து மலர்களை அள்ளிக்கொண்டார். பெண் பிள்ளைகளின் வித்துடல்களுக்கு மலர்களைத் தூவிய போதே அவரின் கண்கள் கலங்கிவிட்டன. ஆண் மாவீரர்களின் முகங்களைப் பார்த்த போது எல்லா முகங்களுமே சிவத்தின் முகம் போலவே தெரிந்தன. அவர் திடீரென அதிர்ந்து போனாலும் ஒரு சில கணங்களிலேயே அது வெறும் பிரமை என்பதைப் புரிந்து கொண்டார். எனினும் கூட அவர்களும் தன்னைப் போல ஒரு தகப்பனின் பிள்ளைகள் என்ற நினைவு வந்து அவரின் மனதை வாட்டியது.

அஞ்சலி நிகழ்வுகளை முடித்துக்கொண்டு இருவரும் திரும்பும்போது பரமசிவம் முருகரிடம், "நான் பெரிய பிழை விட்டிட்டன் முருகர். நான் வெளிக்கிடேக்க அதையும் கொண்டுவந்திருக்க வேணும்" என்றார்.

முருகர் கேலியாகச் சிரித்து விட்டு, "பரமசிவம், நீ பிடிச்சு வைச்ச மண்பீடத்திலையும் கொல்லன் அடிச்சு வளைச்ச இரும்புக் கம்பியுக்கையும் அம்மனை அடக்கிவைக்க முடியுமே?" எனக் கேட்டார்.

"நீ என்ன சொல்லுறாய்.. முருகரப்பு?"

"தெய்வம் மண்ணிலையோ, இரும்பிலையோ, கல்லிலையோ இல்லை, மனதிலைதான் இருக்குது. விளங்குதே?"

முருகர் சொல்வதிலும் சரி இருப்பது போலவே பரமசிவத் துக்கு தோன்றியது. முருகர் தொடர்ந்தார், "நீ கிணத்தடியிலை போய் குளிச்சிட்டு, திருநூத்தை நெத்தியிலை பூசிக்கொண்டு கிழக்கை பாத்து அம்மனை நினைச்சுக் கும்பிடு. அவ முன்னாலை வந்து நிப்பா", அவரின் வார்த்தைகள் அவருக்கு சற்று ஆறுதலைக் கொடுப்பது போல் தோன்றியது. "சிவத்துக்கு ஆபத்து வர அம்மன் விடமாட்டா", என மனதுக்குள் நினைத்தவராகச் சற்று நிம்மதியடைந்தார்.

சுந்தரம் தாயிடம் சவாரி செல்வராஜாவின் வீட்டு நிலைமைகளையும் அவர்களுக்கு ஏற்பட்ட இழப்புக்களையும் ஒன்றும் விடாமல் விளக்கிவிட்டு, "அம்மா முத்தம்மா நாத்துமேடைக்கு தண்ணி ஊத்தினவளே?", எனக் கேட்டான்.

"நான் கவனிக்கேல்லை.. கேட்டுப்பார்...", என்றாள் பார்வதி. கொட்டிலை விட்டு வெளியே வந்த சுந்தரம்,

"முத்தம்மா... முத்தம்மா..." எனக் கூப்பிட்டான்.

அவள் தங்களின் கொட்டிலுக் குள் நின்றவாறே எட்டிப் பார்த்தாள். அவன் கிணற்றடியில் வைத்து, "வலுகெதியிலை நீ என்ரை பெண்சாதி", என்று சொன்னதிலிருந்து அவள் தன்னுள் ஒருவித வெட்கம் உருவாகியிருப்பதை உணர்ந்திருந்தாள். அவள் மெல்ல வெளியே வந்து , "என்ன?", எனக் கேட்டாள்.

"நாத்து மேடைக்கு தண்ணி தெளிச்சனியே?"

"காலமை தெளிச்சிட்டன். பின்னேரம் இனித்தான்..", என்றாள் அவள் ஒருவித தயக்கத்துடன்.

"சரி சரி... வாளியை எடுத்துக்கொண்டு வா", என்றுவிட்டு முன்னால் நடந்தான் சுந்தரம்.

முத்தம்மா வாளியையும் தகரப் பட்டையையும் எடுத்து நீர் நிரப்பிக் கொண்டு நாற்று மேடை நோக்கி நடந்தாள். நாற்று மேடைக்கு அருகில் குந்திய சுந்தரம், "நல்ல விதை.. எல்லாம் முளைச்சிட்டுது. கண்டுகளும் நல்ல மூச்சாய் வருகுது", என்றான்.

முத்தம்மா, "ம்..", என்றாள்.

சுந்தரம் நிமிர்ந்து அவளின் முகத்தைப் பார்த்துவிட்டு, "என்ன ஒரு மாதிரி இருக்கிறாய்?", எனக் கேட்டான்.

"ஒண்டுமில்லை...", என்று அவனின் முகத்தைப் பார்த்து ஒரு மெல்லிய புன்னகையுடன் சொல்லிவிட்டு அவள் தலையைக் குனிந்து கொண்டாள். அவளின் கால் பெருவிரல் மண்ணைக் கிளறியது.

(நெருப்பாற்றில் நீந்துவோம்)

# அஞ்சலி : பிரபஞ்சன்

■ அ.ராமசாமி

எட்டாண்டு காலம் பாண்டிச்சேரி என அழைக்கப்பட்ட புதுச்சேரியில் வாழ்ந்த நான் பிரபஞ்சனின் கதை வெளிகளை நேரில் பார்த்திருக்கிறேன். அங்குலம் மாறாமல் தெருக்களையும், வண்ணங்கள் மாறாமல் கட்டடங்களையும், வாசம் மாறாமல் சூழலையும் எழுதுவதன் மூலம் தனது கதைகளின் பாத்திரங்களை புதுச்சேரிக்காரர்களாகக் காட்டியிருக்கிறார். புதுச்சேரிப் பல்கலைக்கழக சங்கரதாஸ் சுவாமிகள் நிகழ்கலைப் பள்ளியின் கௌரவ விரிவுரையாளராக இரண்டு பருவங்கள் பணியாற்றினார்.

வாரத்திற்கு இரண்டு நாள் வருவார். வருபவர் மாணவிகளோடும் மாணவர்களோடும் தொடர்ச்சியாகப் பேசிக்கொண்டே இருப்பார். மொழி பெயர்ப்பில் தமிழில் கிடைத்த பெரும்பாலான நாடகங்களை வாசித்தவர். ஆண்டன் செகாவின் 'செர்ரிப் பழத்தோட்டம்' நாடகத்தைப் பாடம் நடத்தியபோது நானும் ஓரத்தில் மாணவனாக அமர்ந்து கேட்டிருக்கிறேன். மாணவர்களைத் தள்ளி நிறுத்தாத உரையாடல் அவருடையது.

ஒரு கதை உண்டாக்கும் நம்பகத்தன்மையே அதன் வாசகத் தளத்தை விரிவுபடுத்துகிறது. ஒரு சிறுகதையோ, நாவலோ வாசகர்களைத் தன் பக்கம் இழுக்கவும், அவர்களுக்கு நெருக்கமானதாகத் தோன்றுவதற்கும் புனைவெழுத்தின் மூன்று அடிப்படைகளில் ஏதாவது ஒன்று வாசகரது சொந்த வாழ்க்கையோடு தொடர்புடையதாக இருந்தால் போதும்.

(18ஆம் பக்கம் பார்க்க)



பிரபஞ்சன் (சாரங்கபாணி வைத்தியலிங்கம்) 1945 – 2018




## வாசிகை

உங்கள் ஆக்கங்களை 'வாசிகை', ஆசிரியர், புதுவிதி, 107 : இராச வீதி, கோப்பாய், திருநெல்வேலி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கோ அல்லது sinnarajavimalan18@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கோ அனுப்பி வைக்கலாம்.

■ அழகியசிங்கர்

பெரும்பாலும் நான் பிரபஞ்சனை ஹோட்டல் வாசல்களில் அல்லது பேப்பர் கடை வாசலில், அல்லது இலக்கியக் கூட்டங்களில் சந்திப்பது வழக்கம். அந்தத் தருணங்களில் இலக்கிய நண்பர் களைப் பற்றியும் புத்தகங்களைப் பற்றியும் இருவரும் பேசுவோம். பிரபஞ்சன் சிறுகதைகளின் மீது காதல் கொண்டவர். புதுமைப்பித்தன் கதைகளை எப்படி ரசிப்பது என்பதைப் பற்றி ஒவ்வொரு வாரமும் அவர் கூட்டங்கள் நடத்தியிருக்கிறார். தொடர்ந்து வாசிப்பதும் எழுதுவதும்தான் அவர் வாழ்க்கை.

பீட்டர்ஸ் சாலையில் உள்ள சரவணபவன் ஹோட்டலில் சந்திக்கும் போது அவர் சிகரெட்டைப் புகைத்துக்கொண்டு காட்சி அளிப்பார். பின் இருவரும் சேர்ந்து காப்பி குடிப்போம். அவரைப் பார்த்து நான் 'விருட்சம்' இதழ் பிரதியைக் கொடுப்பேன். உடனே அதற்கான தொகையைக் கொடுத்து வாங்கிக் கொள்வார். இதையெல்லாம் அவரிடம் எதிர்பார்க்காமல் கொடுத்தாலும் அவருடைய நல்ல பழக்கம் சிறு பத்திரிகைகளை மதிப்பது.

15.08.2000ஆம் ஆண்டு ந.பிச்சமூர்த்தியின் நூற்றாண்டு விழா நடத்தினோம். அதில் சிறப்பாக உரை நிகழ்த்தியவரில் பிரபஞ்சனும் ஒருவர். சமீபத்தில் வேடியப்பன், எஸ்.ராமகிருஷ்ணன், பவா செல்லத்துரை எல்லோரும் சேர்ந்து பிரபஞ்சனுக்கு ஒரு விழா நடத்தினார்கள். முதன் முறையாகத் தமிழ் எழுத்தாளரை

(18ஆம் பக்கம் பார்க்க)



ஈழத்தில் இருந்து குறிப்பாக கவிதைகள், உரைநடைகள் என்று மிகச் சிறந்த படைப்புக்கள் வெளிவந்து கொண்டுதான் இருக்கின்றன. பெரும்பாலும் நான் அவற்றைப் படித்துக்கொண்டுதான் இருக்கிறேன். ஆனால் அவர்களைப் பற்றி தமிழ் இலக்கியப் போக்கு என்று சொன்னால் அதற்குள் ஈழம் உட்படுத்தப் படுவதில்லை. அத்தோடு தமிழின் மிகச் சிறந்த எழுத்தாளர்கள் எனும் போது தமிழ் நாட்டு எழுத்தாளர்கள் பெயர் சொல்லப் படுகிறார்களே தவிர ஈழத்து எழுத்தாளர்கள் வருவதில்லை. பெரும்பாலும் இவ்வாறே இருக்கிறது. ஈழத்திலிருந்து கணிசமானளவு இலக்கியப் பங்களிப்பு நிகழ்ந்த போதிலும்கூட தமிழக எழுத்தாளர்கள் அதைக் கண்டுகொள்வதாக இல்லை. இன்னும் கூட ஆதரிக்கத் தகுந்தவர்களாகவும் வரவேற்கத் தகுந்தவர்களாகவும் எடுத்துக்கூறத் தகுந்தவர்களாகவும் ஈழத்து எழுத்தாளர்கள் இருக்கிறார்கள் என்பது என் கருத்து.

- பிரபஞ்சன்.

## பிரபஞ்சனின் 'அப்பாவின் வேஷ்டி'


■ சுவேதா ஜீவன்

சின்னக் குழந்தைகளாய் இருக்கையில் எதற்கெல்லாமோ ஆசைப்பட்டிருப்போம். இன்றைய அவசர யுகக் குழந்தைகளுக்கு அத்தகைய ஆசைகள் வருமா என்பதே சந்தேகம். இரு சிறு குழந்தைகள் தங்கள் அப்பாவின் பட்டு வேஷ்டியைப் பார்த்து ஆசைப்படுவதே இந்தச் சிறுகதை.

இதற்கு ஒரு கதையா? என்றா நினைக்கிறீர்கள்.. பிரபஞ்சன் அதைப் பற்றி விவரிக்கையில் குழந்தையாகவே மாறிவிட்டார். ஆமாம், குழந்தைகளால் மட்டுமே அப்படி ஆசைப்பட முடியும். திவசத்திற்கோ, பண்டிகைகளுக்கோ தான் அப்பா அதை உடுத்திக் கொள்வார். அதை எதிர்நோக்கி காத்திருக்கும் குழந்தைகள். விவரணைகளை வேறோர் உயரிய தளத்திற்கு எடுத்து சென்று விட்டார் ஆசிரியர். என்னென்ன உவமைகள், அப்பப்பா...அப்பா குளித்து விட்டு வந்து வேஷ்டியை கட்டிக் கொள்வதை நிறுத்தி நிதானமாக விவரித்திருக்கிறார். குழந்தைகள் தங்களுக்குப் பிடித்ததை அப்படித்தானே பார்ப்பார்கள். வேஷ்டியின் நிறத்தை விவரிக்கத் தான் எத்தனை உவமானங்கள். அந்தச் சரிகையில் நெய்யப்பட்டிருக்கும் அன்னப்பட்சிகளின் வரிசை, அதைக் குழந்தைகள் வாத்து என்று நினைப்பதும் எவ்வளவு ரம்மியமானவை.

தந்தையின் அலுமாரி, சாதிக்காய் பெட்டி, கல் வைத்த மோதிரங்கள் என்று ஒவ்வொன்றும் ரசிக்கப்படுகிறது. அந்தப் பட்டு வேஷ்டியை துவைத்து, காயவைத்து, மடித்து வைப்பதும் தான் எப்படி விவரிக்கப் பட்டிருக்கிறது. இவற்றின் நடுவில், பிரான்சில் இருந்து கதம்ப சோப் இறக்குமதி நிறுத்தப்பட்டதையும் சொல்கிறார். பண்டிகைக்கு வீட்டுக்குச் சாப்பிட வரும் மரம் ஏறுவோர் வைத்திருக்கும் அரிவாளின் பளபளப்புக்கு அத்துணை ஈர்ப்பு சிறுவனிடம். அந்தச் சிறுவன் வாழ்வின் பரபரப்பில் சிக்கி வளர்ந்து ஆளான பின்னர், ஒரு பண்டிகைக்கு அப்பாவின் வேஷ்டியை கட்டிக் கொண்டால், அது கிழிந்துபோகிறது. அவனோடு சேர்ந்து அந்த வேஷ்டியை அணுவணுவாய் ரசித்த நமக்கும் பாவமாய் போகிறது.

(18ஆம் பக்கம் பார்க்க)



புலம்பெயர்ந்த தமிழர்கள் குறிப்பாக ஈழத்தமிழர்களின் படைப்புகளில் ஒரு தனித் தன்மை, தாக்கம், தமிழுக்கு ஒரு புதிய படைப்புகளை உருவாக்குகிறது. இதற்கான காரணம் காலையில் அலுவலகம் சென்று மாலை வீடு திரும்பும் வாழ்க்கையைப் பார்த்தவர்களின் கண்ணோட்டம் வேறு, வாழ்க்கையிலேயே கஸ்டங்களைப் பார்த்த ஈழத்தமிழர்களின் கண்ணோட்டம் வேறு. இருத்தல் என்ற விடயமே கேள்விக்குள்ளாக்கப்பட்ட மக்களிடமிருந்து வருகின்ற இலக்கியம் இருக்கிறது பாருங்கள் அதில் மிகப்பெரிய ஆழ்ந்த சோகமும் ஒரு மீறுகின்ற தன்மையும் இருக்கும். அது புலம்பெயர்ந்த தமிழர்களிடம் பார்க்க முடிகிறது.

- பிரபஞ்சன்.

# வெற்றியும் நமதே நாளையும் நமதே

**பின்பற்றப்படவேண்டிய முன்னுதாரணம்**



அனர்த்தம் என்பது எதிர் பாராமல் வருவது. அதுவும் இயற்கையின் சீற்றம் ஏற்படுத்துகின்ற அனர்தங்களால்தான் மக்கள் அதிகம் அல்லல்படுகின்றனர். முன்னெப்போதையும்விட அனர்த்தங்கள் இலங்கையில் அண்மைக்காலங்களாக அதிகரித்த வண்ணம் இருக்கின்றது.

ஒவ்வொரு வருடமும் ஏதோ ஒருவிதத்தில் இலங்கை மக்கள் அனர்த்தத்தை எதிர்கொண்டு வருகின்றனர். இந்த அனர்த்தம் நீரினாலும், காற்றினாலுமே அதிகளவில் நிகழ்கிறது. இந்த வருடமும் வட பகுதியிலுள்ள வன்னிக் கிராமங்கள் பல நீரினால் பாதிக்கப்பட்டிருக்கிறது. பாதிப்பென்று கேள்விப்பட்டதும் வட பகுதியில் பாதிக்கப்படாத பகுதியிருந்த மக்கள் அதுவும் இளைஞர்கள் உடனடியாக உறவுகளுக்கு உதவும் பணியில் களமிறங்கினர்.

கடந்த வாரம் அனர்த்த நிவாரணப் பணிகளுக்கென அறிவிக்கப்பட்ட வாரம்போலக் காணப்பட்டது. எதுவித அறிவித்தலுமின்றி அநேகமான சனசமூக நிலையங்கள், வாசிக சாலைகள், கோயில்கள், கிறிஸ்தவ தேவாலயங்கள், மக்கள் நலன்புரி அமைப்புகள், விளையாட்டுக் கழகங்கள், இளைஞர் அமைப்புகள் என்று பல நிறுவனங்கள் தத்தம் கிராமத்திலுள்ள பொதுவிடங்களைத் தேர்வு செய்து நிவாரணப் பொருட்களைச் சேகரிக்கலாகினர்.

கடந்த வாரத்தில் நடைபெறவிருந்த பல கிறிஸ்தவ நிகழ்வுகள் வெள்ள அனர்த்தத்தை முன்னிட்டு ஆடம்பரமில்லாது எளிய முறையில் நடத்தப்பட்டன. கிறிஸ்தவ தேவாலயங்களில் நடைபெற்ற ஆராதனைகளில் அனர்த்தத்திற்குட்பட்ட கிராமங்களும் மக்களும் இயல்புக்குத் திரும்ப வேண்டும் என்று வேண்டிக் கொண்டனர்.

அனர்த்தத்தைப் பற்றிய செய்திகள் வெளிவரத் தொடங்கியதும் மக்கள் விழித்துக் கொண்டனர். பணத்தைக் கொடுத்ததைவிட அதிகம் பொருட்களாக மக்கள் வழங்கியிருந்ததைக் கண்டோம். ஆனால் இப்படியான அனர்த்தஙகளின்போது அதிலிருந்து மக்களை உடனடியாக மீட்பதற்காக அத்தியாவசியப் பொருட்கள் வழங்கப்படுவது மிக முக்கியம். ஆனால் இதில் வழமையாக அவதானிக்கப்பட்ட விடயம் என்னவெனில், அனர்த்தத்தில் இருந்து மீண்டவர்களுக்கு அனர்த்தத்தின்போது கிடைப்பதைப்போல உதவிகள் அனர்த்ததன் பின்னர் கிடைப்பதில்லை. இப்படியான இக்கட்டில் இருந்து மீண்டுவரும் மக்களுக்கு அவர்கள் தங்கள் வாழ்வாதாரத்தைத் தொடங்குவதற்கான உதவிகள் பின்னரும் தேவைப்படும். அவை உடனடியாகச் செய்யப்பட வேண்டும்.

நிவரணப் பொருட்களைச் சேகரிக்கும்போது மக்களும் அவர்கள் சார்ந்த நிறுவனங்களும் தொடர்ந்தும் பாதிக்கப்பட்டவர்களை அவதானித்துச் செயற்பட வேண்டும் என்பது கட்டாய தேவைகளாகப் பார்க்கப்படுகிறது. அனர்த்தினின்று உயிர்த்தெழ உடனடித் தேவைகள் முக்கியமாவதைப்போல, தொடர்ந்தும் சுய மாக நின்று வாழ்வாதாரத்தைத் தேட அவர்களுக்கு சிறு சிறு உதவிகளும் தேவைப்படலாம். எனவே அப்படியான தேவைகளையிட்டும் பொது மக்களும் நிறுவனங்களும் சிந்திக்க வேண்டும்.

நிவாரணப் பொருட்கள் விநியோகத்தில் நடவடிக்கைகள் சீரான விதத்தில் பின்பற்றப்படுவதில்லை என்றதற்கு உதாரணமாகச் சில இடங்களில் உள்ள மக்கள் அளவுக்கு அதிகமாகப் பொருட்களைப் பெற்றிருப்பதைச் சொல்லலாம். ஓரிடத்திலுள்ளவர்கள் அதிகம் பெற்று இன்னொரு இடத்திலுள்ளவர்கள் எதுவும் பெறாமலிருப்பதென்பது கொடுமையே. திரும்பத் திரும்ப ஒருவருக்கே உதவி வழங்குவதால் உதவி கொடுத்தவர் கொடுத்தேன் எனத் திருப்திப்படலாமே ஒழிய எதிர்பார்த்தவாறு அவர் பலன் பெறாது போகலாம்.


அனர்த்தத்தை எதிர்கொண்டவர் அதிலின்று மீண்டு எழப் பல நாட்கள் ஆகலாம். எனவே அதற்கேற்றவாறு அவர்கள் தேவையை எதிர்கொள்ளுவதற்குரிய ஒழுங்குகளைச் செய்ய வேண்டிய கடப்பாட்டோடு நாம் இருக்கிறோம் என்றதையும் நாம் புரிந்து கொள்ள வேண்டும். அனர்த்தத்தின்போது மட்டுமல்லாது அதற்கு அப்பாலும் அவர்கள் நிமிர்ந்தெழச் சில உதவிகள் அவர்களுக்கு அவசியப்படுவதை உணர்ந்தவர்களாக அதற்கும் திட்டங்களை வகுக்க வேண்டியவர்களாக இருக்கிறோம்.

வழமைபோல அரச சார்பற்ற நிறுவனங்களின் செயற்பாடுகளைப்போல தொடர்ச்சியற்றவைகளாகவும், கோவைச் செயற்பாடுகளாகவும் இது போன்ற விடயங்களை முன்னெடுத்துச் செயற்படுவதில் பயனில்லை. அனர்த்தம் என்று கண்டவுடன் எப்படி வெகுண்டெழுந்தோமோ? அப்படியே நமது செயற்பாடுகள் எல்லாம் இருக்குமாயின் வெற்றியும் நமதே. நாளையும் நமதே. ●









காஜல் அகர்வால் நடிப்பில் வெளிவரவுள்ளது 'பாரிஸ் பாரிஸ்' படம். இதன் டீசர் அண்மையில் வெளியாகி 40 இலட்சம் பார்வைகளை கடந்துள்ளது. காரணம் தமிழ் டீசரில் 42ஆவது விநாடியில் இடம்பெற்றுள்ள ஆபாசக்காட்சிதான்.

'ஹிந்தி காட்சியைத்தான் அப்படியே தமிழில் எடுத்துள்ளோம். காட்சிக்கு முன், பின் என்ன நடக்கிறது என்று தெரிந்தால் தவறாகப் எவரும் தவறாகப் பேசமாட்டார்கள்" என்கிறார் படத்தின் இயக்குநர் ரமேஷ் அரவிந்த்.

நடிகை சன்னி லியோன் தனது ருவிற்றர் பக்கத்தில் வெளியிட்டிருந்த 'லவ்லி அக்சிடென்ட்' என்ற பாடலுக்கு, இணையத்தில் செம வரவேற்பு.

கவர்ச்சிகரமாக உருவாகியிருக்கும் இந்தப் பாடல் வெளியான சில மணி நேரங்களிலேயே, மில்லியன் பார்வைகளைத் தாண்டி விட்டது.



ஐஸ்வர்யா ராயின் சாயலில் இருப்பவர் சினேகா உலால். ஹிந்தி, தெலுங்கு படங்களில் நடித்துள்ளபோதும் அவ்வளவு பிரபலமாகவில்லை. இதனால் வாய்ப்புகளை தன்பக்கம் ஈர்க்க அதிக முயற்சிகளை செய்கிறார்.

நீச்சல் உடை, கையில் பழங்களுடன் நிற்கும் படம் ஒன்றை சமூகவலைத்தளத்தில் பகிர்ந்தவர். "உபசரிப்பு மிகச் சிறப்பு. அதை நான் ஏன் செய்யக்கூடாது? நானும் உபசரிக்கக் காத்திருக்கிறேன். என்னிடம் பழங்கள் தயாராக இருக்கிறது. அதை உங்களுக்கு பரிமாறட்டுமா?" இரட்டை அர்த்த வசனத்தையும் பகிர்ந்துள்ளார்.



தெலுங்கில் ஜூனியர் என்.டி.ஆர்., ராம்சரண் தேஜா இணைந்து நடிக்கும் படத்தை இயக்கி வருகிறார் ராஜமவுலி. தற்காலிகமாக ஆர்.ஆர். ஆர். என்று பெயரிடப்பட்டு, ஹைதராபாத்தில் படப்பிடிப்பு நடந்து வருகிறது.

இதில் மிக முக்கியமான பாத்திரத்தில் ஒப்பந்தமாகி இருக்கிறார், சமுத்திரக்கனி. தற்போது அடுத்த சாட்டை படத்துக்காக கும்பகோணத்தில் நடித்து வரும் அவர், 'ராஜமவுலி எப்போது அழைத்தாலும் வந்து நடித்துக் கொடுப்பேன்" என்று உறுதி அளித்துள்ளாராம்.

# புதிய பணிப்பாளர்



இங்கிலாந்து ஆண்கள் கிரிக்கெட் அணியின் முகாமைத்துவப் பணிப்பாளராக விளங்கிய முன்னாள் ஆரம்பத் துடுப்பாட்ட வீரரான அன்ட்ரூ ஸ்ரோஸ் தனது மனைவிக்கு ஏற்பட்ட புற்றுநோயைக் கருத்திற்கொண்டு கடந்த ஒக்ரோபரில் தனது பதவியை ராஜினாமா செய்திருந்தார். அவரின் இடத்திற்கு தற்போது முன்னாள் சுழற்பந்து வீச்சாளரான அஸ்லி ஜைல்ஸ் கடந்த வாரம் நியமிக்கப்பட்டுள்ளார்.

இங்கிலாந்து அணிக்காக 2008 - 2014 ஆம் ஆண்டு காலப்பகுதியில் 52 டெஸ்ட் போட்டிகளில் விளையாடிய ஜைல்ஸ் சில மாதங்கள் இங்கிலாந்து ஒருநாள் கிரிக்கெட் அணியின் பயிற்சியாளராகவும் இருந்தவர். தற்போது வார்விக்ஷயர் பிராந்திய அணியின் பணிப்பாளராக விளங்கும் ஜைல்ஸ் எதிர்வரும் ஒரு வருட காலத்திற்குப் பதவியில் நீடிப்பார் என அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த ஒரு வருட காலத்தினுள் உலகக் கிண்ணப் போட்டிகள் மற்றும் ஆஷஸ் தொடர் போன்ற முக்கிய தொடர்கள் வருவதனால் அவற்றுக்கு அணியைத் தயார்ப்படுத்துவது சவாலானதாகவே கருதப்படுகின்றது.

# அரங்கம் விஸ்தரிப்பு

கிராண்ட்ஸ்லாம் போட்டிகளில் ஒன்றான விம்பிள்டன் ரென்னிஸ் போட்டிகள் வருடாவருடம் சிறப்பாக நடைபெற்று வந்தாலும் போட்டி நடைபெறும் அரங்குகள் நெருக்கமாக அமைந்தமை ஒரு குறைபாடாகவே இருந்து வந்துள்ளது. காரணம் விம்பிள்டன் அரங்கிற்குப் பக்கத்திலேயே 120 வருடங்கள் பழைமை வாய்ந்த உள்ளூர் கோல்வ் விளையாட்டுக் கழகம் இருந்தமையால். இந்நிலையில் கடந்தவாரம் தமக்குச் சொந்தமான நிலத்தை கோல்வ் கழகம் விம்பிள்டன் போட்டி அமைப்பாளர்களுக்கு விற்பதற்கு முடிவு செய்துள்ளது.




இதனால் தற்போது விம்பிள்டன் போட்டி அமைப்பாளர்கள் போட்டி நடைபெறும் அரங்குகளின் அளவைப் பெரிதாக்குவது குறித்தும் ஏனைய கிராண்ட்ஸ்லாம் போட்டிகளில் காணப்படும் சில வசதிகளை விம்பிள்டனில் ஏற்படுத்துவதற்கும் திட்டமிட்டு வருகின்றார்கள். அத்தோடு இடப்பற்றாக்குறை காரணமாக விம்பிள்டன் தகுதிகாண் போட்டிகள் விம்பிள்டன் போட்டிகள் நடைபெறும் அரங்கில் இருந்து சில மைல்கள் தொலைவில் உள்ள அரங்கிலேயே நடைபெற்று வந்தன. நிலம் வாங்கப்பட்டதன் மூலம் அப்போட்டிகளையும் விம்பிள்டன் அரங்கிலேயே நடத்துவதற்கும் வாய்ப்புக் கிட்டியுள்ளது.

# பேச்சுவார்த்தை

பாகிஸ்தான் கிரிக்கெட் சபையின் தலைவரான ஈஷான் மணி கடந்தவாரம் தென்னாபிரிக்காவுக்கு பயணம் ஒன்றை மேற்கொண்டுள்ளார். இதன் நோக்கம் பயங்கரவாதத் தாக்குதலால் பாகிஸ்தானில் சர்வதேச போட்டிகளை நடத்த முடியாதுள்ளதால் தென்னாபிரிக்க அணியை தங்கள் நாட்டுக்கு விளையாட அனுப்புமாறு கிரிக்கெட் தென்னாபிரிக்காவிடம் கோருவதற்காக இவ்வாறு உதவி கேட்கக் காரணம் கடந்தவருடம் பாகிஸ்தான் அணிக்கும் உலகப் பதினொருவர் அணிக்கும் இடையில் பாகிஸ்தானில் நடைபெற்ற போட்டித் தொடரில் தென்னாபிரிக்க வீரர்கள் பலரை கிரிக்கெட் தென்னாபிரிக்கா அனுப்பியதனால்.

அதுபோல அடுத்த வருட உலகக்கிண்ணப் போட்டிகளுக்கு முன்னதாக மார்ச் மாதம் அவுஸ்ரேலியாவுடன் 5 ஒருநாள் போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடுவதற்கும் கிரிக்கெட் அவுஸ்ரேலியாவுடன் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளது. அதில் 3 போட்டிகளை ஐக்கிய அரபு அமீரகத்திலும் 2 போட்டிகளை பாகிஸ்தானிலும் நடத்துவதற்கு உத்தேசித்துள்ளது. 1998 ஆம் ஆண்டுக்குப் பின்னர் அவுஸ்ரேலியா, பாகிஸ்தானுக்கு சுற்றுப்பயணம் எதனையும் மேற்கொள்ளவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.



# வரப்பிரசாதம்



ஐ.பி.எல். போட்டிகளின் வருகை இந்தியாவில் ஏனைய விளையாட்டுக்களின் வளர்ச்சிக்கும் ஒரு உந்துசக்தியாக விளங்கியதென்றால் அது மிகையில்லை. இதற்கு இந்தியாவில் நடைபெற்றுவரும் பிறீமியர் பட்மின்ரன் லீக் தொடரும் நல்ல உதாரணம். இந்தத் தொடரின் 4 ஆவது பருவகாலப் போட்டிகள் கடந்த சனிக்கிழமை ஆரம்பமாகியது. இதுவரை 8 அணிகள் பங்குபற்றிய இந்தத் தொடரில் இம்முறை 9 ஆவது அணியாக புனே 7 ஏசஸ் அணி அறிமுகமாகியுள்ளது. 23 நாட்கள் நடைபெறவுள்ள இந்தத் தொடரின் இறுதிப்போட்டி எதிர்வரும் ஜனவரி 13ஆம் திகதி பெங்களூரில் நடைபெறவுள்ளது.

2016 ஒலிம்பிக் சம்பியன் கரோலினா மரின், 2018 உலக சம்பியன் பி.வி. சிந்து, சாய்னா நேவால் உட்படப் பலரும் பங்குபற்றுகின்றமை இந்தத் தொடரின் நட்சத்திர மதிப்பை அதிகரித்துள்ளது.

அதேசமயம் வளர்ந்து வரும் வீரர்களுக்கான சிறந்த களமாக அமைவதோடு வீரர்களின் பொருளாதார முன்னேற்றத்திற்கும் வழி சமைத்துள்ளது. 2017 இல் இந்திய வீரரான ஸ்ரீகாந் 5 சர்வதேச தொடர்களில் விளையாடி சுமார் 2கோடி சம்பாதித்திருந்தார். ஆனால் அவ்வாண்டு நடைபெற்ற பிறீமியர் பட்மின்ரன் லீக் தொடரில் 6 போட்டிகளில் மட்டும் விளையாடி 80 லட்சம் சம்பாதித்துக் கொண்டமை குறிப்பிடத்தக்கது.

# அனுபவத்தால் முடியும்

கடந்த வருடம் லண்டனில் நடைபெற்ற உலக சம்பியன் ஷிப் தொடரில் அமெரிக்க வீரரான ஜஸ்ரின் கட்லின் 100 மீற்றர் ஓட்டப் போட்டியில் தங்கப்பதக்கம் வென்றவர். உலக சம்பியன்ஷிப் தொடரில் 100 மீற்றரில் அவர் பெற்ற இரண்டாவது தங்கப்பதக்கமாக அது விளங்கியது. முன்னதாக 2005 ஆம் ஆண்டு நடைபெற்ற தொடரிலும் அவர் தங்கப்பதக்கம் வென்றிருந்தார்.




ஆனாலும் தற்போது 100 மீற்றர் ஓட்டப் போட்டியில் சக இளம் அமெரிக்க வீரர்களான கிறிஸ்ரியன் கோல்மன், நோவா லைல்ஸ் மற்றும் றோனி பேகர் ஆகியோர்களும் ஆதிக்கம் செலுத்தி வருகின்றார்கள். எனவே 2019 செப்ரெம்பர் மாதம் டோஹாவில் நடைபெறவுள்ள அடுத்த உலக சம்பியன்ஷிப் தொடரில் 37 வயதாகும் கட்லின் இவர்களோடு போட்டியிட்டு 100 மீற்றரில் தங்கப்பதக்கத்தை தக்க வைக்கமுடியுமா என்ற கேள்வி எழுந்தது. இந்நிலையில் கடந்தவாரம் இதற்குப் பதிலளித்த கட்லின் 'எனது அனுபவம் சக போட்டியாளர்களைவிடச் சற்றுக்கூடுதலாக எனக்கு உதவுமென நம்புகிறேன்'எனக் கூறியுள்ளார்.

# நீக்கமும் நியமனமும்



மன்செஸ்ரர் யுனைற்றட் அணியின் முகாமையாளராக இருந்த ஜோஸ் மௌறின்கோ கடந்தவாரம் அதிரடியாக நீக்கப்பட்டுள்ளார். இரண்டரை வருடங்களுக்கு முன்னர் அவர் நியமிக்கப்பட்டாலும் கடந்த இரண்டு பருவகாலத்திலும் கிண்ணத்தைக் கைப்பற்ற அணியால் முடியவில்லை. அத்தோடு நடப்புத் தொடரில் 18 போட்டிகளின் முடிவில் புள்ளிப்பட்டியலில் அணி 6 ஆம் இடத்திலேயே உள்ளது.

மன்செஸ்ரர் யுனைற்றட் அணியின் வரலாற்றில் இத்தகைய மோசமான ஆரம்பத்தை 28 வருடங்களுக்குப் பின்னர் தற்போதுதான் சந்தித்துள்ளது. அத்தோடு இவருக்கும் அணி வீரரான போல் போக்பாவுக்கும் இடையில் ஏற்பட்ட பனிப்போரும் பதவி நீக்கத்தில் தாக்கம் செலுத்தியதாகக் கருதப்படுகின்றது. இந்நிலையில் அவருக்குப் பதிலாகப் புதிய முகாமையாளராக மன்செஸ்ரர் யுனைற்றட் மற்றும் நோர்வே அணியின் முன்னாள் வீரரான ஒலே குன்னார் சோல்ஸ்க்யேர் இந்தப்பருவகாலம் முடியும்வரை அணியின் இடைக்கால முகாமையாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்தப் பத்திரிகை லக்ஷ்மி பிறின்டர்ஸ் (பிறைவேற்) நிறுவனத்தால் 29.12.2018 அன்று 107, இராச வீதி, கோப்பாய் - திருநெல்வேலி, யாழ்ப்பாணத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.